
ஸ்ரீ மஹா கணபதி மந்த்ர வழிபாடு

37

[சதுராவ்ருத்தி தர்ப்பணம், நித்ய லகு மஹாகணபதி ஹோமம், உபநிஷத்துக்கள், துதிகள் அடங்கியது]



பதிப்பாளர்

அனந்தாநந்த ப்ரகாசன்

சென்னை - 600 024

ஸ்ரீ மஹா கணபதி மந்த்ர வழிபாடு

[சதுராவ்ருத்தி தர்ப்பணம், நித்ய லகு மஹா கணபதி ஹோமம், உபநிஷத்துக்கள், துதிகள் அடங்கியது]

தமிழில் தொகுத்தவர் :
"அருட்சக்தி" நாகராஜன்

அனந்தாநந்த ப்ரகாசன்
'குருக்ருபா'
21, பாப்பாத்தியம்மாள் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
போன் : 42 78 24.

 1993 ஆஷாட பௌர்ணமி

முதல் பதிப்பு - ஜூன் 1993

பிரதிகள் - 500

விலை : ரூ. 20/-

புத்தகம் கிடைக்குமிடம் :

1. "அனந்தாநந்த ப்ரகாசன்"
21, பாப்பாத்தியம்மாள் தெரு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
Ph. 427824

2. **Arutsakthi Nagarajan**
H. No. RZ 202/3B,
Janaki Niketan, Gali No. 8-A,
Sadh Nagar, Palam Colony,
New Delhi - 110 045.

3. அருணா புக் ஹௌஸ்
21/146, தெற்கு மார்க்கெட் தெரு,
லோன்ஸ்கொயர், சென்னை - 600 108.
Ph. 561552

Printed at Stree Seva Mandir Press, Saligramam, Madras-93.

Ananthananda Series - 2

SREE MAHA GANAPATHI
MANTRA VAZHIPADU

[Chathuravruthi Tharpanam, Nithya Laghu Mahaganapathi Homam, Upanishads, Sthothras, etc.]

COMPILED IN TAMIL BY

"ARUTSAKTHI" NAGARAJAN

ANANTHANANDA PRAKASAN
"GURUKRUPA"
21, Papathiammal Street,
Kodambakkam,
Madras - 600 024. Ph: 427824

 1993 Ashada Pournami

First Edition, June 1993

Copies : 500

Price : Rs. 20/-

Copies can be had from :

1. ANANTHANANDA PRAKASAN,
   No. 21, Papathi Ammal Street,
   Kodambakkam, Madras - 24.
   Phone : 427824

2. ARUTSAKTHI, NAGARAJAN,
   H. No. RZ 202/3B Janaki Niketan,
   Gali No 8A, Sadh Nagar,
   Palam Colony,
   New Delhi - 110 045.

3. ARUNA BOOK HOUSE,
   21 / 146, South Market Street,
   Loane Square,
   Madras - 600 108.
   Phone : 561552

இந்நூல் ஸத்குருநாதர் பூஜ்ய ஸ்ரீ C. V. ஸ்வாமி சாஸ்திரி [ஸ்ரீ அனந்தாநந்த நாதர்] அவர்கள் ஸ்ரீ சரணங்களில் சமர்ப்பணம்




ஸ்ரீ வித்யா மார்த்தாண்ட, ஸ்ரீ வித்யா வாசஸ்பதி

ஸ்ரீ C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

[குஹாநந்த மண்டலி]

7-2-1900 6-9-1980




ஸ்ரீ சிதானந்த நாதர் ஸ்ரீ அனந்தாநந்த நாதர்

ஸ்ரீ குஹானந்த நாதர்

|| ஶ்ரீ : ||

|| ஓம் நமோ பகவத்யை சச்சிதானந்த ரூபிண்யை ||

பொருளடக்கம்



ஸ்ரீ சிதானந்த நாதர் ஸ்ரீ அனந்தாநந்த நாதர்

ஸ்ரீ குஹானந்த நாதர்

॥ श्री : ॥

॥ ஓம் நமோ பகவத்யை சச்சிதானந்த ரூபிண்யை ॥

பொருளடக்கம்

பதிப்பாளர் முன்னுரை

மாதா மஹ மஹாசைலம் மஹஸ்ததபிதாமஹம் |
காரணம் ஜகதாம் வந்தே கண்டாது பரிவாரணம் ||

அணுவுக்கும் அணுவாய் மஹத்துக்கும் மஹத்தாய் விளங்குவது பரம ஆனந்தமான பரம்பொருள். இந்தப் ப்ரபஞ்சங்கள் எல்லாம் அதனைக் கொண்டுதான் உஜ்ஜீவிக்கின்றன.

''பரம ஆனந்த ஏதஸ்ய-ஏவானந்தஸ்ய அன்யானி பூதானி மாத்ரா முபஜீவந்தி'' — என்ற ப்ருஹதாரண்ய உபநிஷத் ப்ரமாணம்இதை உறுதிசெய்கிறது. அதாவது பரமானந்தத்தின் ஒரு திவலையைக் கொண்டுதான் பிரிதான ப்ரபஞ்சங்களெல்லாம் வாழ்கின்றன என்கிறது உபநிடதம். எனவே எந்த பரமானந்தம் எல்லாவற்றிக்கும் ஸர்வகாரண பூத சக்தியாக இருக்கிறதோ அதுதானே குரு தத்துவம் ''ஸ்ரீ குரு ஸர்வ காரண பூதா சக்தி'' யல்லவா !

இப்படிப்பட்ட மேலான குரு தத்வத்தை போதித்தவரும், மந்த்ர சாஸ்திர பாரங்கதரும், ஸ்ரீ வித்யா வாசஸ்பதி, ஸ்ரீ வித்யா மார்த்தாண்ட என்ற விருதுகளைப் பெற்றவருமான எங்கள் குருநாதர் **பூஜ்ய ஸ்ரீ C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்** (ஸ்ரீ அனந்தாநந்தநாதர்] ஸ்ரீ மஹாகணபதிக்கென்றே ப்ரத்யேகமாக ''ஸ்ரீ மஹாகணபதி ஸபர்யா பத்ததி'' என்ற மந்த்ர வழிபாட்டு முறைகள் அடங்கிய ஸமஸ்க்ருத நூல் இப்போது ''அனந்தாநந்த ப்ரகாசன்'' மூலம் மறு பதிப்பாக சில புதிய சேர்க்கைகளுடன் நல்ல முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது முழுவதும் ஸமஸ்க்ருத பாஷையில் இருப்பதால் இதனை தமிழிலும் பிரசுரிக்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாக இருந்தது. அதனால் யாவரும் எளிதில் அனுஷ்டிக்கத்தக்க வகையில் அதிலுள்ள சில பகுதிகளை இப்போது ''ஸ்ரீ மஹாகணபதி மந்த்ர வழிபாடு'' என்ற பெயரில் தமிழில் வெளியிடுகிறோம். இதில் மஹாகணபதி சதுராவ்ருத்தி தர்ப்பணம், லகு மஹாகணபதி ஹோமம், துதிகள், உபநிடதம் என்றபடி தொகுக்கப் பட்டுள்ளது.

இதனை தமிழில் தொகுத்துக் கொடுத்து உதவியவர், எங்கள் குருநாதரின் சிஷ்யரும், தமிழில் ஸ்ரீ வித்யா உபாஸனை ஸம்பந்தமான பல தத்வார்த்த வேதாந்த ரஹஸ்யங்கள் அடங்கிய கட்டுரைகளை எழுதியவருமான "ஸ்ரீ அருட்சக்தி நாகராஜன்" என்பவர். மேலும் "ஸ்ரீ எனமன்ற வேணு கோபால சாஸ்திரி" என்ற பெரியவர் எழுதியிருக்கும் "ஸ்ரீ வல்லபேசோபநிஷத்" தெலுங்கு வ்யாக்யானத்திலிருந்து சுருக்கமான முறையில் தமிழில் மேற்படி உபநிடதத்திற்கு ஒரு விளக்கவுரையும் எழுதியிருக்கிறார். இதனால் ஸ்ரீ மஹா கணபதியின் பரம்பொருட்தன்மை எளிதில் புலனாகிறது.

ஸ்ரீ மஹாகணபதியின் விசேஷமான துதிகள் சிலவும் ஸாதகர்களின் பாராயணத்துக்காக இதில் சேர்க்கப் பட்டுள்ளது.

இப்புத்தகம்—தமிழில் அச்சிடப்பட்டிருப்பதால் ஸமஸ்க்ருத பாஷையின் உச்சரிப்புக்கு தெரிந்தவர்களின் துணையை நாடி அனுஷ்டிக்க வேண்டுகிறோம். பிழைகள் மனித இயல்பான தினால் கற்றோர் பிழை பொறுத்து திருத்துவர்களாக.

இதனை விரைவில், நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த ஸ்திரீ சேவா மந்திர் அச்சகத்தாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

ஸ்ரீ குருபாததூளி

Dr. P. V. B. மஹாதேவ்

"அனந்தாநந்த ப்ரகாசன்"

21, பாப்பாத்தி அம்மாள் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 24.
May 1993.

ஸ்ரீ பரதேவதாயை நம :

முகவுரை

உலகுக்கு ஆதாரமானவர் ஸ்ரீ மஹாகணபதி. ஸர்வசக்தி வாய்ந்தவர். வேதங்களின் முதலாம் ஓங்கார வடிவில் உள்ளவர். உபநிடதங்கள் இவரை ஆதிமுதல் தெய்வமாகவே அதாவது பரம்பொருளாகவே வர்ணிக்கின்றன. ரிக்வேதத்திலுள்ள **"ப்ரஹ்மணஸ்பதி"** ஸூக்தமும் கணபதியின் தத்வத்தை பரக்கப் பேசுகின்றன.

கஜவக்த்ராதி சின்ஹைச்ச சின்ஹிதம் கணநாயகம்
ஸகுணம் நிர்குணம் ப்ரம்மமூர்த்தி ரூபதரம் முனே !

யானை முகம் முதலான சின்னங்களினால் பக்தியுடன் உபாசிக்கப்படுகிற மஹாகணபதி ஸகுணம், நிர்குணம் ஆகிய இரண்டு நிலைகளிலும் ஸுலப ஸித்தியைக் கொடுக்கிறார் என்று முத்கலபுராணம் கூறுகிறது. விக்ன நிவர்த்திக்கும், காரிய ஸாதனைக்கும் இவரது வழிபாடு பண்டிதன் முதல் பாமரன் வரை அவசியமே. இவரை வழிபட சாஸ்திரங்களில் அனேக வழிபாட்டு முறைகள் உண்டு. "நித்யோத்ஸவம்" என்ற க்ரந்தத்தில் ஸ்ரீமஹா கணபதியின் உபாஸனை ஸ்ரீவித்யா சாஸ்த்ர சம்பிரதாய வழிகளில் கூறப்பட்டிருப்பதை உபாஸக உலகம் அறியும். இந்த முறையில் இன்னும் பல அபூர்வ ந்யாஸங்கள் முதலான சேர்க்கைகளுடன் **"ஸ்ரீ மஹா கணபதி ஸபர்யா பத்ததி"** என்ற புத்தகம் சென்ற 1961 ல் வெளிவந்தது. இதை எழுதியவர் குஹானந்த மண்டலியில் Senior ம் மந்த்ர தந்த்ர சாஸ்திரங்களிலே பாரங்கதரும் ஸ்ரீ அனந்தாநந்தநாதர் என்கிற **ப்ருஹ்ம ஸ்ரீ C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்** ஆவார். அதன் மறு பதிப்பும் இப்பொழுது வெளிவந்துள்ளது.

மேற்படி ஸ்ரீ ஸ்வாமிசாஸ்திரிகளின் சிஷ்யரும் தீவிரமான குருபக்தி காரணமாக அம்பாள் பிரஸாதத்தை அடைந்தவருமான ஸ்ரீ காமேஸ்வரானந்தநாதர் எனப்படுகிற **ஸ்ரீ அருட்சக்தி நாகராஜன்** இந்த புத்தகத்தை தொகுத்தும் ஸ்ரீ வல்லபேசோபநிஷத்திற்கு தமிழில் ஒரு விளக்கவுரையும் எழுதியுள்ளார். இவரை எனக்கு சென்ற 1983 ஆம் ஆண்டு முதல் பரிச்சயம் உண்டு. குஹானந்த மண்டலி ஸ்தாபகரும் அருட்கவியுமான ப்ரஹ்ம ஸ்ரீ சுப்ரமண்ய ஐயர்

[ஸ்ரீசிதானந்தநாதர்] நூற்றாண்டு விழா மலரை வெளியிட்ட வேளையில் இவரது சிநேகம் கிடைத்தது. அந்த மலரில் சிதானந்த அலை'' என்ற தலைப்பில் ஸ்ரீ வித்யா ஸபர்யா தத்வ ரஹஸ்யங்கள் அபூர்வமான முறையில் அருளால் விளக்கி எழுதி யிருக்கிறார். அவர் இன்னும் பலவிதமான தலைப்புகளில் வேதாந்த தத்வ ரஹஸ்யங்களை எழுதியிருக்கிறார். அவைகள் வருங்காலத்தில் புத்தகமாக வெளியிடப்படுமானால் உபாஸனா உலகுக்கு பேருபகாரமாகும் என்பது என் எண்ணம்.

இந்த புத்தகத்தில் கண்ட சதுராவ்ருத்தி தர்ப்பணம் என்ற காலை அனுஷ்டானம் ஸாதகர்களுக்கு பலப்ராப்தியை கொடுப் பதாகும். அடுத்ததாக மஹாகணபதி ஹோமம் சுருக்கமாக தாந்த்ரீக முறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது. ஸாதகர்கள் முடியுமானால் நித்யகர்மாகவே செய்யலாம். அதற்கான ஆதார பூர்வ கதையும் இதிலே உள்ளது. ஏக விம்சதி நாம ஸ்தோத்ரம் ருணஹர்த்ரு கணேச ஸ்தோத்ரம், ஸித்தி விநாயக ஸ்தோத்ரம் என்ற மூன்றும் பாராயணத்திற்குரியது. விநாயகர் அகவலும் சேர்க்கப்பட்டிருப்பதானது மூலாதார கணபதி யோக ஸித்தியையும் கொடுப்பார் என்ற நிலையையும் உணர்த்து வதாக இருக்கிறது. அதன்பின் உபாஸகர்களுக்கு அவசியமான கணபதி அதர்வசீர்ஷஉபநிஷத் ஸ்ரீ வல்லபேசோபநிஷத் இரண்டும் உள்ளது. பின்னதற்கு தமிழில் ஒரு விளக்கவுரையும் எழுதப்பட்டுள்ளது. அதனால் ஸ்ரீ மஹாகணபதியே பரம்பொருள் என ஸித்தாந்தப்படுத்தப்படுகிறது. மேலும் ஸ்வஸ்திக் பத்மம் ப்ரணவத்தைக் குறிக்கிறது என்ற ஆராய்ச்சிக் கண்ணோட்டம் மிக அபூர்வமான செய்தியாம். இந்நூல் அனந்தாநந்த ப்ரகாசன் மூலம் வெளிவருவது. இதுபோல் இன்னும் பல வெளியீடுகளை விரும்புகிறேன்.

இந்த புத்தகம் அனைவருக்கும் மிக உபயோககரமானது மட்டுமல்ல, வேதாந்த தத்வங்களையும் வெளிப்படுத்துகிறது. இதைப் போல இன்னும் அனேக நூல்களை வெளியிட்டு ஸ்ரீ அருட்சக்தி நாகராஜன் உபாஸனா உலகுக்கு உபகாரமாக இருக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல ஆத்ய சக்தியான தேவியை ப்ரார்த்திக்கிறேன்.

D. ராமரத்னம்
தலைவர்
மஹதி மண்டல கமிட்டி
சூளைமேடு, சென்னை..

19-6-93
சென்னை-94.

உ

ஸ்ரீ குருப்யோ நம :

|| ஞானம்ருதம் ஸமரஸம் ககனோபமோஹம் ||

பணிவுரை

ஸ்ரீ காமாக்ஷி சரணாம் போஜம் பாவயந்தம் ஸதாஹ்ருதி |
அனந்தாநந்த நாதம் தம் ஸத்குரும் சிந்தயேஸதா ||

யத் ப்ரஹ்ம வேதாந்த விதோ வதந்தி
பரம் ப்ரதானம் புருஷம் ததான்யே |
விச்வோத்கதே : காரணமீச்வரம் வா -
தஸ்மை நமோ விக்ன நிவாரணாய ||

பொருளாகி என்னுள் புகுந்து நின்றாய் நின்றும்
பொய்யடியேன்!
ஒரு நாழியேனும் எனை மறந்து உன் பால் உறைந்ததுண்டோ
ஹே ! குருநாதனே

நின்அருள் நோக்கம் ஒன்றும் குறைவில்லை காண்
என்மனத்து அன்பின்மையால் இப்பிணிப்புகளே !

குருநாதர் :

மனிதன் 'மனிதனாக' வாழ வேண்டும். மனிதருக்குள்ளே மிருகங்களும் உண்டு ; அரக்கர்களும் உண்டு, இந்த ரஜோகுண தமோகுண வ்ருத்திகளை விட்டுவிட்டு ஸத்வ குணம் ஒன்றையே ப்ரதானமாக கொண்டு வாழ்ந்து ; தனக்கும் தான் வாழும் உலகத்துக்கும் நன்மையே செய்து நிலைபெறுவதுதான் ''மானுடம்'' என்கிற மனித பண்பாடு. எனவே இந்த மானுடமாக வாழ்ந்து தன் வினையை கழித்துக்கொள்ளவே மனிதன் இங்கு வந்திருக்கிறான். ஆனால் பெரும்பாலானவர்கள் இதை எண்ணாமல் மேலும் மேலும் புதிய வினைகள் சேரும் வண்ணம் செயல்படுகிறார்கள். மனிதனாக வாழ்ந்து ப்രாரப்தத்தைக் கழித்து, வினை கழிய வினையாற்றி தன்னை ஸபலமாக்கிக் கொள்ள இன்று எத்தனை பேர் முயலுகிறார்கள் ? முயன்றவர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் யார் ? தன் பிறவிப்

ப்யனை தெரிந்து, ஆத்ம லாபத்தைத்தான் அடைந்தது மட்டு மல்லாது இந்த தரணியோர்க்கெல்லாம் வாரி வழங்கி நிலைபெற்ற பெரியோர்கள், ஸத்குருநாதர்கள், மஹான்கள், ஆசார்ய பெருந்தகைகள் என்பர்.

ஸநாதன குரு பரம்பரையில் வந்த இவர்கள் பிறருடைய துன்பங்களை நீக்குவதும் யுக தர்மத்தினால் அல்லல்படுபவர் களை உஜ்ஜீவிக்கும் வழியைக் கூறுவதும், தர்ம வழியில் நடந்து வழி காட்டுவதுமான ஸத்தான தொழிலைக் கொண்டவர்கள். இவர்களே 'பரம்பரா குருநாதர்கள்' என்று போற்றப் படுகிறார்கள்.

பவரோகம் :

(கடபயாதி ஸங்க்யா சாஸ்த்ரப்படி) ''ஶ்ரீ நாத :'' என்றால் 702 என்பதாக வரும், இதிலிருந்து நாம் தெளிவது என்ன ?

பவமாகிய பிறவி நோய் அதாவது - பவரோகம் நமக்கு ஏழு, ஏழாக அமைந்திருக்கிறது. ''எழுமைக்கும் ஏழேழ் பிறவிக் கும்''... என்று பிறவி ஏழு ஏழாக அமைவதாக அறநூல் கூறும். இந்த ஏழின் கணக்கை முடிவு செய்து தன்னிலேயே லயப்படுத்திக்கொள்ள ஶ்ரீ நாதர் என்ற பரம்பொருள் காத்து நிற்கிறது, ஜீவர்களாகிய நாம் பரம்பொருளாகிய ஶ்ரீ நாதர்கள் தான் என்பதை உணர்த்தவே ஏழின் பெருக்கமான ஜீவன் பரம்பொருளான பூஜ்யத்தோடு (சக்தி தத்துவத்தோடு) இணைந்து விடுகிறது. ஆனால் இது பரம்பொருளை ஜீவன் ஓதி உணர்ந்து ஒன்றுபட்ட பிறகல்லவா சாத்தியமாகும்.

ஸாதனை செய்யும் காலத்தில் பரம்பொருளான குரு வேறாகவும், ஜீவனான ஸாதகன் வேறாகவும் இருந்து இந்த உலகில் சாதனை செய்யும் நிலையை வேறுபடுத்திக் காட்டத் தான் ''ஶ்ரீ நாத :'' பதத்தில் 2 என்ற எண்ணும் இருப்பது போல் அமைந்து நமக்கு உண்மையை தெரிவிக்கிறது. எண்களின் கூடுதல் 9 என்பது ஸமாதி முதலான பல தத்வங் களை விளக்குகிறது. இதனை விரிக்கின் பெருகும்.

''சரீர நோக்கத்திலுள்ள குரு ஸ்வரூப பாவனையால் தான் சேதன வடிவ குருஸ்வரூப பாவனை திடப்படல் வேண்டும்'' என்று ஶ்ரீ சிதானந்த நாதர் அவர்களும் தனது தத்வ விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே "சாதகனும் குருவும் லயப்படுவதுதான் உபாஸனை" என்பர் பெரியோர், அதாவது ஜீவபதம் ப்ரஹ்ம் பதத்தோடு ஒன்றுகிறது.

துரீயம் :

ப்ரஹ்மபூயமான "துரீயம்" பரம்பொருள். இதுவேதான்; ஜீவனும் ஆகவேண்டும். ஆனால் அவஸ்தைகளுக்கு ஆட்பட்டு உழன்று கொண்டிருக்கும், ஜீவன்தான் துரீய நிலையாகவே இருந்தும் அதை உணர்ந்தான் இல்லை, நிர்குணமான "தத்" பதத்தை அவஸ்தைகளுக்கு அதீதமென்று விசுத்த ஸத்வ மாயையினாலே ஜீவன் உணர்ந்து ப்ரஹ்மத்தோடு லயமாக வேணும்.

நானாகிய ப்ரஹ்மம் ஸத்யம், ச்ருஷ்டிக்கப்பட்ட ப்ரபஞ் சாதி வஸ்துக்களிலே நிறைந்திருக்கும் ஆனந்தம் ஸத்யம், "ஆனந்தம் ப்ரஹ்மேதி வ்யஜானாத்" இது ஸ்ருதி ப்ரமாணம்.

இவைகளெல்லாம் "பாரமார்த்திக ஸத்யம்" இதை உணர வ்யவகாரிக ஸத்யத்தை ஜீவன் துணை கொள்கிறான், காணும் உலகமும் ப்ரும்மம் தான், ஸத்யம் தான், மாயை மறைத்துக் கொண்டிருக்கிறது, என்றெல்லாம் வ்யவகரிக்கப்படுகிறது.

"மாத்ரு கர்ப்பத்தில் வினையினால் புகுந்த ஜீவன் காலாந்தரத்திலே வெளிவந்து ப்ரபஞ்ச கூட்டுறவினாலே ; புண்யம், பாபம் என்கிற இரட்டைகளினாலே ; காமாதி அரிஷ்டவர்க்கங்களினாலே ; உழன்று கொண்டிருக்கும் காலத் தில் அவனிடத்தில் "நீ தான் ப்ருஹ்மம் (தத்வமஸி) என்று மஹா வாக்ய உபதேசம் செய்தால் அவனது பாழும் மனம் இதை ஒத்துக்கொள்ளுமா ?

குருவழி :

எத்தனைதான் உபநிஷத் ப்ரதிபாத்யமான ஸத்யங்களை உண்மையான ப்ரஹ்ம வித்யா ஸாதனா மார்க்கங்களை புராண ; புண்ய கதை உபமான உபமேயங்களை இவனுக்கு விளக்கிச் சொன்னாலும், இவனிடத்திலே எடுபடுவதில்லை. எனவேதான் ஸ்ரீ ஸத்குரு நாதர் இவனை தன் வழிக்கு கொண்டுவர ஒரு புது வழியைக் கண்டார்.

"நீ ப்ருஹ்மம்" என்று கூறும் வேதாந்த வழியை முதலில் கூறாமல் "உனக்கு வந்திருக்கிற பிறவி நோயை போக்குகிறேன்,

கஷ்டத்தை விலக்குகிறேன், தேஜஸையும் யசஸையும் கொடுக்கிறேன், நல்ல அறிவைக்கொடுக்கிறேன். நீயாராக இருந்தாலும் எனக்கு கவலையில்லை. உனது பிறவிக் கணக்கை முடித்து உன்னை என்னோடு (7+0+2) ஐக்யப்படுத்திக் கொள்ளுகிறேன். அதற்காக தர்ப்பணம், பூஜை, ஹோமம் இவைகளை செய், இதுதான் எனது வழி குரு வழி'' என்ற நிலையில் ஸத்குரு நாதர் சாதகனுக்கு, சீடனுக்கு ''உபாஸனை'' - ''வழிபாடு'' என்கிற பவரோக வைத்யத்தை செய்கிறார். எனவேதான் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்கிற வ்யவகாரத்தை ஸத்யம் என்று நம்பிக்கொண்டு செயல்படும் ஸாதகனை இதற்கு மேற்பட்ட அவஸ்தை ஒன்றுண்டு; ''துரீயாவஸ்தை'' எனப்படும் அதை நீ உணரவேண்டும்; என்கிற நிலையில் அவனை ஸாதனையால் ப்ரஹ்ம பூய பதத்திற்கு ஏற்றுகிறார். இருந்தாலும் ஸாதனையை செய்துவரும் ஸாதகனுக்குதான் ''துரீயம்'' என்ற நிலை உணராமல் இருப்பதற்கு த்ரிபுடிகளே விக்னங்களாம். அதாவது ஜாக்ரத் - ஸ்வப்ன - ஸுஷுப்தி; - ஆணவம் கன்மம்- மாயை; ஜீவன் - ஈச்வரன்-ஜகத்; என்ற இந்த த்ரிபுடிகளே விக்னங்களாக அமைந்துவிடுகின்றன. பவ நோய்க்கு மருந்து இந்த விக்னங்கள் நீங்குவதுதான், வெல்லப்பிள்ளையாருக்கு வெல்லத்தையே நிவேதனம் செய்வது போல், ப்ரஹ்ம பதத்தை அடைய ஏற்படும் விக்னங்களை நிவர்த்தி செய்ய அந்த ப்ரஹ்ம பதத்தையே சரணடைவதைத் தவிர வேறு வழி இல்லை, விக்னங்கள் நீங்குவது என்ற நிலையை எண்ணும் போது விநாயகப் பெருமான் தான் முன்னிற்கிறார் அல்லவா.

முன்னிற்கும் கணபதி :

உத்கீதமான ப்ருஹ்மமும் - ப்ரஹ்மபூயமான துரீயமும் ஒன்று தானே : ''சுழியாயிருந்த உத்கீதம் ப்ரபஞ்சமாய் நீண்ட வரலாற்றை பிள்ளையார் சுழி'' என்று பெரியோர் கூறுவர். எனவேதான் இங்கு பரம்பொருளாம் ஸ்ரீ மஹா கணபதியைப் பற்றி அறியலாகிறது. 15

''மாதா ச பார்வதி தேவீ பிதாதேவோ மஹேச்வர : என்றபடி உலகிற்கு மாதாவும் பிதாவுமான இவர்களது திருமணத்திற்கே மஹாகணபதி பூஜை நடந்திருக்கிறதை புராணம் பகர்கிறது.

இவ்வாறு கடபயாதி சங்க்யா சாஸ்திர விளக்கத்தாலும் மஹாவாக்ய விமர்சனத்தாலும், புராண சான்றுகளாலும், ப்ரஹ்ம பூயமான துரீயபதம் வல்லபேசரான மஹா

கணபதியே- என்பது இங்கு சந்தேஹவிபரீதமற தெளிவாகிறது. ஏனென்றால் இவர் ப்ரபஞ்ச ச்ருஷ்டிக்கு முன்னே இருந்தவர், ப்ருக்ருதி, புருஷ தத்துவத்திற்கு அப்பாற்பட்டவர், இதனை "அதர்வசீர்ஷம்- "ஆவிர்பூதம் ச ஸ்ருஷ்ட்யாதௌ ப்ருக்ருதே: புருஷாத்பரம்"- என்று கூறுகிறதே.

ஸர்வ காரண பூதமான சக்தி ஸ்ரீகுரு. ஸர்வகாரண ப்ருஹ்மபூயமான துரியம் மஹா கணபதி. ப்ரஹ்ம பூயமே உத்கீதமான ப்ரணவம்.

"ப்ரணவஸ்வ ரூப வக்ரதுண்ட" என்று தீக்ஷிதர் க்ருதியும் நமக்கு சான்றாகிறது. எனவே மஹாகணபதியான ஸ்ரீ ஸத்குருநாதரை எல்லாவற்றிற்கும் ஆதிநாதராக நினைத்து அவருடைய ஸ்ரீ பாதகமலங்களில் முதலில் ப்ரணாமங்களை செலுத்துகிறோம்.

தேஜஸ்வீயாகவும் யசஸ்வீயாகவும் உடைய சத்குருநாதர் ஸ்ரீ அனந்தாநந்த நாதர் அவர்கள் ஸ்ரீவித்யா வாசஸ்பதி யாக இருந்தும் - ஸ்ரீமஹா கணபதிக்கென்றே ப்ரத்யேகமான "ஸபர்யா பத்ததி" ஏன் உருவாக்கினார்கள் என்பது ஸ்ரீ வல்ல பேசோபநிஷத்தின் தாத்பர்யத்தை படித்த பிறகுதான் நமது சிற்றறிவுக்கு புலப்படுகிறது. இவர்களது மஹாகணபதி ஸபர்யா பத்ததி மூலம் கணபதியின் தத்வரஹஸ்யங்கள் மிகவும் ப்ரபலமாக தெரியவருகிறது. இதனை அறிஞர்கள் ரஸித்து அனுபவிப்பதிலிருந்து உணரலாகிறது. பரமரஹஸ்யமான மூல மந்த்ர ந்யாஸங்களையும், உபாஸனா முறைகளையும், தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தின் ஏட்டுப்பிரதிகளி லிருந்து கிடைக்கப்பெற்று தொகுத்து புத்தகத்தில் ஆக்கிக் கொடுத்த வள்ளல் நமது குருநாதர். 14 உலகங்களிலும் மஹா கணபதியின் தத்வ தரிசனம் தெரிய வேணும் என்கிற பரம் கருணையோடுதான் அவர் மஹாகணபதியின் 28 அக்ஷர மந்த்ரத்தை 14 பாகமாக்கி 14 ஸ்லோகங்களில் "கணேச மூல மந்த்ர பதமாலா" என்ற துதியை செய்திருக்கிறார்கள் போலும். கணபதி தத்வம் ஸ்ரீ வித்யா தக்வத்துடன் இணைந்ததுதான் என்பதையும் - அதே துதியில் பதினைந்தாவ தாக ஸ்லோகம் செய்து அதனை மாலையாக்குகிறார். 14 புவனங்களிலும் வ்யாபித்திருக்கும் மஹா கணபதி ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் மூலாதாரமாம் குண்டலினி சக்தியாக வீற் றிருக்கிறார். இவரேதான் பராவாக்காகவும் விளங்குகிறார்".

"மூலாதார ஸ்திதோஸி நித்யம்" என்று உபநிடதம் இதனை உறுதி செய்கிறது. குணங்களைக் கடந்து, காலங்களைக் கடந்து, பஞ்ச பூதங்களைக் கடந்து "பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்ற வாக்பதங்களின் மூலமாய் "பரா" வாக விளங்கும் மஹாகணபதியை ஸாதகன் தனக்கபேதமாக அறிய வேணும் என்றால் இவன் அவரை முறையாக ஏகாக்ர சித்தத்தோடு ஸாதனை செய்தல் வேண்டும்.

ஸாதனை :

இந்த ஸ்ரீ மஹா கணபதியை எவ்வாறு ஸாதனை செய்வது என்பதை முதலில் தெளிய வேணும். முதலில் சொன்ன ப்ரகாரம் பரம்பரா ஞான வழியில் வந்த குருநாதர்களிடம் மந்த்ரோபதேசம் செய்துகொண்டு அவர்கள் விதித்தபடி - 4 லக்ஷமோ 1 லக்ஷமோ ஜபம் செய்யவேண்டும். மேலும் அவரது அனுமதி பெற்று சதுராவ்ருத்தி தர்ப்பணம் - மஹா கணபதி ஹோமம் இவைகளை முறைப்படி செய்துவரல் வேண்டும்.

அஜபா கால விதானப்படி - ஸுர்ய உதயத்திலிருந்து 600 சுவாசகாலம், [1 நிமிஷத்துக்கு 15 சுவாசங்கள்] அதாவது 40 நிமிஷங்கள், ஸ்ரீ கணபதி காலம் எனப்படும். அக்காலத்தில் சதுராவ்ருத்தி தர்ப்பணமோ, ஹோமமோ, ஜபமோ, செய்து வந்தால் - மிக கடினமான செயல்கள் எனத் தோன்றுவதெல்லாம் சுலபமாவதுடன் ஸர்வ விக்னங்களும் நிவர்த்தியாகி - நினைத்த காரியம் கைகூடும்.

ஸ்ரீ அனந்தாநந்த நாதர் அவர்கள், தான் செய்த ஸ்ரீ கணேச ஸுப்ரபாதத்தில் கூறுகிறார் பாருங்கள் :-

"தேவ : சதுர்த்யாம் ப்ருகுவாஸரே ச மித்ரோதயே தர்ப்பண ஹோம துஷ்ட :"

எனவே உதய காலத்தில் செய்யும் கணபதியின் ஸாதனா விசேஷத்தை இவ்வாறு உணர்த்துகிறார். பவரோக வைத்யரான ஸத்குருநாதர் இவ்வாறு சதுராவ்ருத்தி தர்ப்பணம், ஹோமம் இவைகளை பக்தர்களையும் சிஷ்யர்களையும் ஸாதகர்களையும் செய்ய வைத்து, பலப்ராப்தியை கண் முன்னால் நிறுத்திவிடுவார்கள்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றபடி - இம்முறைகளை அவர்கள் கற்றுத்தந்த ப்ரகாரம் - நாங்கள்

அனுஷ்டித்த வழியில் - இதிலே அச்சு வாகன - மேற்றியிருக்கிறோம்.

கணபதிக்கு ப்ரியமான சதுராவ்ருத்தி தர்ப்பணத்தில் 444 என்ற எண் மிக முக்கியமானது என்பது புலப்படுகிறது. இதில் ஜகத்-ஜீவ-பரம் என்ற மூன்று நிலையிலும் துரீய ப்ருஹ்மமான கணபதியே அதாவது 4வது நிலையாக இருப்பதையே; ஊடுருவி, விரவி இருப்பதையே இந்த 444 என்ற (மூன்று முறை நான்கு) எண் உணர்த்துவதாகவே குரு வருள் தோன்ற வைக்கிறது.

எந்த தேவதைகளையும் தீர்த்தத்திலே ஆவாஹித்து பூஜிப்பது என்பது முறையானதினாலே இங்கும் ஸ்ரீ மஹாகணபதியை தீர்த்தத்திலே ஆவாஹித்து - தீர்த்த ரூபமாகவும், மந்த்ர ரூபமாகவும் தன்வயப்படுத்தி அமைகிறோம். ("கணபதி தர்ப்பணப்ரிய:" என்பது வாக்யம்)

இதனால் ஒரு ஸாதகன் தனது நித்ய வாழ்க்கையில் தினசரி-தான் படும் அல்லல்களுக்கு பரிகாரமாக அன்றய அலுவல்களில் மனம் ஒன்றி ஈடுபட்டு வெற்றி பெறுவதற்காக, த்யான யோகத்தின் (Meditation) முழுமையை உணருவதற் காக இந்த சதுராவ்ருத்தி தர்ப்பணத்தை முறையாக செய்து வந்தால்-அதன் பூரண பலத்தை அவன் அடைவதை நிச்சயம் உணரலாம் இது அனுபவ உண்மையாகும்.

ஹோமதத்வம் :

அடுத்ததாக ஸ்ரீ மஹாகணபதி ஹோமம், இதனை நித்யானுஷ்டானமாக, மிகவும் ஸங்க்ரஹமாக நித்ய ஹோமம் செய்யும் வழியில் அனுபவ ஸாத்யமான க்ரமத்துடன் எழுதப் பட்டுள்ளது. இந்த கணபதி ஹோமத்தின் தத்வ மகாத் மியத்தைப் பற்றி ஸ்ரீ அனந்தாநந்தநாதர் கூறும் நடந்த உண்மைக் கதை ஒன்று விளக்கத்துடன் இதில் அச்சிடப் பட்டுள்ளது. அது தவிர மேலும் சில தத்வங்களை இங்கு அவர் அருளால் காணுவோம்.

"உபாஸனையே ஹோமம்" என்பது ஸத்குரு நாதர் வாக்யம். இது திடப்படவே பஹிர்முகமாக அக்னியில் ஹோமம். இதில் ஹவிஸாக உடைய இந்த்ரிய வ்ருத்திகளை எப்படி ஹோமம் செய்வது என்ற நிலையைக் காணுவோம். பரப்ரஹ்மமான கணபதிக்கு ப்ரியக்ரமான ஹோமத்ரவ்யம் 'அஷ்டத்ரவ்யம்" என்ப்படுகின்றது. இதன் விவரம் வருமாறு :

(1) கொழுக்கட்டை (மோதகம்) (2) அவுல் (ப்ரதுகம்) (3) நெல்பொறி (லாஜம்) (4) ஸத்துமா (ஸக்து) (5) கரும்புத் துண்டு (இக்ஷுபர்வா) (6) முற்றின தேங்காய் கொப்பரை (நாளிகேரம்) (7) எள் (திலம்) (8) பழுத்த வாழைப்பழம் (பலம்)

இப்படியுள்ள அஷ்டத்ரவ்யங்களின் தத்வங்களை அவரே விளக்குகிறார். பாருங்கள் :

1) நாநாரூப கவசாச்சாதித ஸச்சிதானந்த பூர்ண **மோதகம்**

2) ஸம்ஸார பாதாவாரி ஸந்தப்த அனேக கஷ்டமுஸலாஹத மனோவ்ருத்திரூப **ப்ருதுகம்**

3) தபோ விஸுத்த ஸத்வகுணரூப **லாஜம்**

4) த்ருடமானஸ சூர்ணீக்ருதேந்த்ரியாஹதவிஷயரூப - **ஸக்த்து**

5) விவித மனோரூப - **இக்ஷுபர்வம்**

6) ஜீவன்முக்த ஸ்திதிரூப - **நாளிகேரம்**

7) ஜீவரூப - **திலம்**

8) பக்வ மனோரூப - **பலம்**

இப்படி இந்த்ரிய விருத்திகள் ஹோமம் செய்யப்படுகிறது. இதை தமிழில் பார்ப்போம்.

1) நாமரூபம் என்கிற கவசங்களையுடைய சச்சிதானந்த ரஸமயமான பூர்ணம் மோதகம் (அஸ்தி-பாதி-ப்ரியம்)

2) ஸம்ஸார உபாதைகளாகிற கொதிக்கும் ஜலத்தில் போடப்பட்ட நெல் கொதித்து பின் பலவிதமான கஷ்டங்கள் என்கிற உலக்கையால் இடிக்கப்பட்ட சிதைந்த மனோவ்ருத்தி ரூபமான அவல்.

3) தபஸினால் வறுபட்டு விஸுத்த ஸத்வகுண ரூபமான நெற்பொறி. (உஷ்ணத்தால் வறுக்கப்பட்டது-வெண்மை)

4) த்ருடமனஸினால் நன்றாக பொடி செய்யப்பட்ட இந்த்ரிய விஷயங்கள் ரூபமான - ஸத்துமா. (இந்திரியங்களால் இழுக்கப்பட்ட சப்தாதி விஷயங்கள்)

5) பலவித மனோரூபமான கரும்புத்துண்டு (விதவிதமான மனோவ்ருத்திகளைக் காட்டுகிறது - மன இக்ஷுதனு: என்கிறது உபநிஷத்)

6) ஜீவன்முக்த ஸ்திதி ரூபமான தேங்காய் - ஸம்ஸாரமரத்திலிருந்து விடுபட்டு அதில் - பற்றில்லாமல் தனக்கும் தன் சரீரத்துக்கும் ஸம்பந்தமில்லாமல் அதாவது ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமல் இருக்கும் தன்மை)

7) ஜீவரூபமான எள் (செக்கில் இடப்பட்டு நசுங்குகிறது) ஸம்ஸாரத்தில் கஷ்டம் படப்படத்தான் ஆத்ம ஞானம் வரும்.

8) பக்குவமான பழுத்த நிலையில் உள்ள மனோரூபமான பழம்.

இப்படியாக ஸ்ரீகுரு நாதர் உபாஸனையே ஹோமம் தான் என்பதை அஷ்டத்ரவ்யங்களின் தத்வ ரஹஸ்யங்களைக் கூறி நம்மை கணபதி ஹோமம் என்கிற கர்மாவை செய்ய வைப்பதன் மூலம் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை ஏற்படுத்தி கொடுக்கிறார்.

உபநிஷத் உலா :

மஹாகணபதி தத்வம் தீர்த்தரூபமாக ஸாதகனிடத்தில் தன்மயமாகி, பிறகு ஹோமரூபமாக வ்ருத்திகள் ஆஹுதிகள் செய்யப்பட்டு ஶுத்த ஸத்வப்ரதான நிலையில் மஹாகணபதி என்கிற ப்ரஹ்ம பூயதுரீயத்துடன் இரண்டறக் கலக்கவே இந்த ஸாதனை வழி செய்கிறது. இதன்பின் உபநிஷத் ப்ரதிபாத்யமான ஸத்யங்களை ச்ரவணம் செய்கிறோம். ஸாதகர்களுக்கு ப்ரபலமாக தெரிந்த ''ஸ்ரீ கணபத்யதர்வசிர்ஷம்'' முதலில் உள்ளது. அடுத்ததாக ''ஸ்ரீ வல்லபேசோப நிஷத்தும் அதன் தமிழ் விளக்கவுரையும் உள்ளது.

இந்த ஸ்ரீ வல்லபேசோபநிஷதத்திற்கு தெலுங்கு மொழியில் ''ஸ்ரீ எனமன்ற வேணுகோபால சாஸ்த்திரி'' என்ற தத்வ தர்சியான ஒரு பெரியவர் விரிவான விளக்கவுரை ஒன்று எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறியுள்ள கருத்துக்கள் ஸாதகனின் ஸாதனைக்கு மிகவும் துணை செய்வதாக அமைந்திருந்ததால்- அதனை சுருக்கி தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது: தமிழாக்கின விவரம் அந்த உபநிடதத்தின் முன்னுரையிலேயே காணலாம்.

ஸமர்ப்பணம் :

தமிழில் - தமிழக உபாஸகச்ரேஷ்டர்களின் சௌகரியத்துக் காக மட்டுமே ஸ்ரீ ஸத்குருக்ருபாலத்தினுல் - எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. ஸம்ஸ்க்ருத மொழி ஞானமுள்ளவர்கள் ''ஸ்ரீ மஹா கணபதி'' ஸபர்யா பத்ததியில் உள்ளதைக் கண்டு அனுஷ்டானம் செய்யலாம். மற்றவர்கள் தமிழில் சரியான உச்சரிப்புகளை தெரிந்தவர்களைக் கொண்டு கேட்டு அறிந்து அனுஷ்டிக்கலாம். தர்ப்பணம், ஹோமம் இரண்டும் மந்த்ரோப தேசமானவர்களுக்கு மட்டுமே உபயோகமாம்.

விரிந்த கடல் நீரில் இந்த நூல் ஒரு திவலை. இருந்த போதிலும் ஸத்குரு சரண க்ருபையில் மஹத்தானது. குரு நாதரவர்களின் கருணை நோக்கம் இல்லையானுல் நம்மால் பேசவோ, எழுதவோ முடியாது என்பது உண்மையல்லவா! அன்பர்கள், பெரியோர்கள் இதில் உள்ள குற்றம் நீக்கி குணம் கொள்ள வேண்டுகிறோம்.

ஸாதகர்கள் ஸாதனை செய்து பலன் அடைவார்களானுல் இந்நூல் வெளியிட்டதன் நோக்கம் ஸபலமாகிறது.

இந்நூலுக்குத் தேவையான துதிகளைக் கொடுத்துதவியும், தக்க ஆலோசனைகள் வழங்கியும் பெருமைப்படுத்திய குருநாதர் அவர்களின் திருக்குமாரர் "ஸ்ரீ C. V. வெங்கடேஸ்வரன்" அவர்களுக்கு ப்ரணமங்கள்.

''அனந்தாநந்த ப்ரகாசன்'' மூலமாக வெளி வரும் ''ஸ்ரீ மஹாகணபதி மந்த்ர வழிபாடு'' என்ற இந்த நூலை தொகுத்துக் கொடுக்கத் தூண்டியும், ஸ்ரீ வல்லபே சோபநிஷத் - வ்யாக்யானத்தை தெலுங்கு மொழியிலிருந்து தமிழில் எழுத உதவி செய்தவருமான அடியேனது தீக்ஷா ஜ்யேஷ்டர் உபாஸக ஸ்ரீ Dr. P. V. B. மஹாதேவ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இதற்கு மனமுவந்து முன்னுரையளித்த ஸ்ரீ D. ராமரத்னம் அவர் களுக்கு க்ருதக்ஞையை தெரிவிக்கிறேன்.

''ரிதம்பரா ஞான''த்தை அருளும் உத்தம ஸத்குருநாதர் அவர்களது "ஸ்ரீ பாதுகைகள்" உத்க்ருஷ்டமாக விளங்கட்டும்.

5) பலவித மனோரூபமான கரும்புத்துண்டு (விதவிதமான மனோவ்ருத்திகளைக் காட்டுகிறது - மன இக்ஷுதனு : என்கிறது உபநிஷத்)

6) ஜீவன்முக்த ஸ்திதி ரூபமான தேங்காய் - ஸம்ஸாரமரத்திலிருந்து விடுபட்டு அதில் - பற்றில்லாமல் தனக்கும் தன் சரீரத்துக்கும் ஸம்பந்தமில்லாமல் அதாவது ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமல் இருக்கும் தன்மை)

7) ஜீவரூபமான எள் (செக்கில் இடப்பட்டு நசுங்குகிறது) ஸம்ஸாரத்தில் கஷ்டம் படப்படத்தான் ஆத்ம ஞானம் வரும்.

8) பக்குவமான பழுத்த நிலையில் உள்ள மனோரூபமான பழம்.

இப்படியாக ஸ்ரீகுரு நாதர் உபாஸனையே ஹோமம் தான் என்பதை அஷ்டத்ரவ்யங்களின் தத்வ ரஹஸ்யங்களைக் கூறி நம்மை கணபதி ஹோமம் என்கிற கர்மாவை செய்ய வைப்பதன் மூலம் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை ஏற்படுத்தி கொடுக்கிறார்.

உபநிஷத் உலா :

மஹாகணபதி தத்வம் தீர்த்தரூபமாக ஸாதகனிடத்தில் தன்மயமாகி, பிறகு ஹோமரூபமாக வ்ருத்திகள் ஆஹுதிகள் செய்யப்பட்டு ஶுத்த ஸத்வப்ரதான நிலையில் மஹாகணபதி என்கிற ப்ரஹ்ம பூயதுரீயத்துடன் இரண்டறக் கலக்கவே இந்த ஸாதனை வழி செய்கிறது. இதன்பின் உபநிஷத் ப்ரதிபாத்யமான ஸத்யங்களை ச்ரவணம் செய்கிறோம். ஸாதகர்களுக்கு ப்ரபலமாக தெரிந்த "ஸ்ரீ கணபத்யதர்வசிர்ஷம்" முதலில் உள்ளது. அடுத்ததாக "ஸ்ரீ வல்லபேசோப நிஷத்தும் அதன் தமிழ் விளக்கவுரையும் உள்ளது.

இந்த ஸ்ரீ வல்லபேசோபநிஷதத்திற்கு தெலுங்கு மொழியில் "ஸ்ரீ எனமன்ற வேணுகோபால சாஸ்த்திரி" என்ற தத்வ தர்சியான ஒரு பெரியவர் விரிவான விளக்கவுரை ஒன்று எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறியுள்ள கருத்துக்கள் ஸாதகனின் ஸாதனைக்கு மிகவும் துணை செய்வதாக அமைந்திருந்ததால்- அதனை சுருக்கி தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது: தமிழாக்கின விவரம் அந்த உபநிடதத்தின் முன்னுரையிலேயே காணலாம்.

ஸமர்ப்பணம் :

தமிழில் - தமிழக உபாஸகச்ரேஷ்டர்களின் சௌகரியத்துக்காக மட்டுமே ஸ்ரீ ஸத்குருக்ருபாலத்திஞல் - எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. ஸம்ஸ்க்ருத மொழி ஞானமுள்ளவர்கள் "ஸ்ரீ மஹா கணபதி" ஸபர்யா பத்ததியில் உள்ளதைக் கண்டு அனுஷ்டானம் செய்யலாம். மற்றவர்கள் தமிழில் சரியான உச்சரிப்புகளை தெரிந்தவர்களைக் கொண்டு கேட்டு அறிந்து அனுஷ்டிக்கலாம். தர்ப்பணம், ஹோமம் இரண்டும் மந்த்ரோபதேசமானவர்களுக்கு மட்டுமே உபயோகமாம்.

விரிந்த கடல் நீரில் இந்த நூல் ஒரு திவலை. இருந்த போதிலும் ஸத்குரு சரண க்ருபையில் மஹத்தானது. குருநாதரவர்களின் கருணை நோக்கம் இல்லையாஞல் நம்மால் பேசவோ, எழுதவோ முடியாது என்பது உண்மையல்லவா ! அன்பர்கள், பெரியோர்கள் இதில் உள்ள குற்றம் நீக்கி குணம் கொள்ள வேண்டுகிறோம்.

ஸாதகர்கள் ஸாதனை செய்து பலன் அடைவார்களாஞல் இந்நூல் வெளியிட்டதன் நோக்கம் ஸபலமாகிறது.

இந்நூலுக்குத் தேவையான துதிகளைக் கொடுத்துதவியும், தக்க ஆலோசனைகள் வழங்கியும் பெருமைப்படுத்திய குருநாதர் அவர்களின் திருக்குமாரர் "ஸ்ரீ C. V. வெங்கடேஸ்வரன்" அவர்களுக்கு ப்ரணாமங்கள்.

"அனந்தாநந்த ப்ரகாசன்" மூலமாக வெளி வரும் "ஸ்ரீ மஹாகணபதி மந்த்ர வழிபாடு" என்ற இந்த நூலை தொகுத்துக் கொடுக்கத் தூண்டியும், ஸ்ரீ வல்லபேசோபநிஷத் - வ்யாக்யானத்தை தெலுங்கு மொழியிலிருந்து தமிழில் எழுத உதவி செய்தவருமான அடியேனது தீக்ஷா ஜ்யேஷ்டர் உபாஸக ஸ்ரீ **Dr. P. V. B. மஹாதேவ்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இதற்கு மனமுவந்து முன்னுரையளித்த ஸ்ரீ D. ராமரத்னம் அவர்களுக்கு க்ருதக்ஞையை தெரிவிக்கிறேன்.

"ரிதம்பரா ஞான"த்தை அருளும் உத்தம ஸத்குருநாதர் அவர்களது "ஸ்ரீ பாதுகைகள்" உத்க்ருஷ்டமாக விளங்கட்டும்.

ப்ரஹ்மானந்த பெருநிலையை ஸகஜமாக்க வேணும் என்கிற ப்ரார்த்தனையுடன் ஸ்ரீ ஸத்குரு நாதர் அவர்களது ஸ்ரீ பாதுகைகளில் ஆத்ம ஸமர்ப்பணம்.

ஸ்ரீ குருசரணரேணு,

சென்னை – 23,
மே 1993.

"அருட்சக்தி நாகராஜன்"

குறிப்பு :

1) இதனுள்ளே 3 என்ற இடங்களில் "ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்" என்று கூறிக்கொள்ளவும்.

2) ஸ்ரீ வல்லபேசோபநிஷத் - இதில் - மூலத்தில் போடப் பட்டுள்ள வரிசை எண்களின் அடிப்படையில் - தமிழ் விளக்கத்தின் எண் வரிசை உள்ளது.

Our Other Publications

1. MAHA GANAPATHI SAPARYA PADDATHI-Sanskrit Rs. 60/-
2. " " " " Telugu Rs. 60/-
3. Sridevi Nithyanikam - Telugu (in press)
4. Vyakhyana Vaikhari - Telugu (in press) (Lalitha Sahasranama Bhashyam)
5. Sri Subramanya Kalpam - Telugu (in press)
6. Varivasya Rahasyam - Telugu (in press)
7. Sivasakthi Mayam Jagad - Tamil (in press)

ஸ்வஸ்திக் பத்மம்

இதன் தொன்மை பற்றி ஒரு கண்ணோட்டம்.

ஒருமையுடன் ஸத்குருவின் திருமலரடியினை நினைத்து வழி படுவோர்க்கு மிகவும் கூடமானதும், ரஹஸ்யமானதுமான தத்துவங்கள் நிச்சயம் தெளிவாகின்றன என்பதற்கு கிடைத் துள்ள பல சான்றுகளில் ஒன்றுதான் ஸ்வஸ்திக் பத்மத்துக்கும் ஸ்ரீ மஹாகணபதிக்கும் உள்ள ஸாம்யமாகும்.

ஸ்ரீ மஹாகணபதிக்கு ஸ்வஸ்திக் பத்மத்தில் பூஜை என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் இந்த பத்மத்துக்கும் கணபதிக்கும் என்ன தொடர்பு என்பது ஆத்மனளவில் தெளிவாகவில்லை. இதுபற்றி ஸ்ரீ ஸத்குருவினிடத்தில் வினவிய போது **"பிற்காலத்தில் உனக்கே ஸ்புரிக்கும்"** என்ற பதிலே கிடைத்தது. 18 ஆண்டுகளுக்கு பிறகு அந்த நேரம் இப்போதுதான் அமைந்துள்ளது. கிடைத்த அருள் விடையினை ஆராய்வோம்.

ஸ்ரீ மஹாகணபதி தான் பரம்பொருள் - ப்ரஹ்மம் என்பது உபநிஷத் ஸித்தாந்தம். அவரேதான் ப்ரணவ வடிவம். ப்ரணவத்தின் தத்வமே அவர்தான். மாயையும், ப்ரக்ருதி புருஷனும் சேர்ந்த வடிவமல்லவா அவருடையது. ஸ்ரீ. முத்துஸாமி தீக்ஷிதர் அவர்களின் க்ருதியே அதற்கு ப்ரமாணம். **"ப்ரணவஸ்வரூபவக்ரதுண்ட:"** இதிலிருந்து **"ஓம்"** என்ற ப்ரணவமே ஸ்ரீ மஹாகணபதிதான் என்று அமைகிறது.

பழமையான நமது ஸநாதன தர்மம் - தொல்பொருள் புதைபொருள் இலாக்காவினால் தற்காலத்தில் தோண்டி எடுக்கப் பட்ட சின்னங்கள், சிலைகள், கல்வெட்டு எழுத்துக்கள் ஆகிய வற்றிலிருந்து தெரியவருகிறது என்பது வரலாறு கண்ட உண்மை. இதில் அந்த இலாக்காவினால் பரிசீலிக்கப்பட்டுள்ள ஸிந்துவெளி நாகரிக காலத்தின் எழுத்துக்கள் அப்போது சித்திர எழுத்துக்களாகத்தான் இருந்திருக்கிறது. அவைகளின் பரிணாமம்தான் மொழியின் பிறப்பு. எனவே சுமார் 5000 ஆண்டு களுக்கு முன்புள்ள கோட்டு வரி வடிவ எழுத்துக்களை ஆராய்ச்சி யாளர்கள் இந்த காலத்திய எழுத்துக்களோடு சம்பந்தப்படுத்தி அவைகளின் பொருளை அறிகிறார்கள். உதாரணமாக ஸிந்து வெளி மக்கள் எழுதியுள்ள கோட்டு வடிவ எழுத்துக்களில் சிலவற்றை நாம் கண்டபோதில் அவைகள் அபூர்வமான உண்மையை புலப்படுத்துகிறது. அவைகள் "ஓம்" என்ற ப்ரணவத்தையே தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன. எப்படி எனக் காணுவோம்,

 இது நாம் பேசும் தமிழ்மொழியின் "ஒ"

 இதுபோல் போட்டால் நம் தமிழில் உள்ள "ஓ"

 இந்த கூட்டல் அடையாளம் நம் தமிழில் உள்ள "ம"

இதிலிருந்துதான் தத்வங்கள் புலனுகின்றன. பிற்காலத்தில் நாளாவட்டத்தில் இந்த "ஓ" என்ற எழுத்துக்கான இரண்டு கோடுகளும், "ம" என்ற எழுத்துக்கான கூட்டல் அடையாள மும் இரண்டும் ஒன்று சேர்ந்து அதாவது

 இம்மாதிரி ஸ்வஸ்திக் வடிவத்தில் "ஓம்" என்பதை குறிப்பதாக அமைந்திருக்கிறது. ஒரு பதத்தின் கடைசி எழுத்துக்கு புள்ளி (அனுஸ்வாரம்) வைத்து படிப்பது மொழிகளின் பொது அமைப்பு. எனவேதான் 5000 ஆண்டுகள் தொன்மையான வரிவடிவ எழுத்தான ஸ்வஸ்திக் பத்மம் "ஓம்" என்பதை குறிப்பதாக இருப்பதால் தொன்மையான ப்ரணவ தத்வமான ஸ்ரீ மஹாகணபதிக்கு இதை உரியதாக்கி முன்னோர்கள் வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது அருள் வேளை ஆராய்வின் விளக்கமாக அமைகிறது.

ஸ்ரீ குருதத்வம் ஸாதகனின் விருப்பங்களை எவ்வாறு பூர்த்தி செய்கிறது என்பதற்கு இது ஒரு சான்று - இதனை இவ்விடத்தில் தெரிவிக்க வைத்த ஸ்ரீ குரு பாதுகைகளுக்கு ப்ரணமங்கள். பெரியோர்களுக்கு இது தவிர வேறு சாஸ்த்ரோக்தமான காரணங்கள் தத்வங்கள் தெரிந்திருக்கலாம். ஆனலும் ஸ்ரீ குருவருள் ஸாதாரண, பாமரனை ஸாதகனுக்கும் பக்தியிருந் தால் தத்வஸ்புரணம் ஏற்படும் என்பதற்கேதான் இந்த சான்று.

"ரேணு"

உ

श्री :

श्री गुरुभ्यो नमः

श्री महागणपतये नमः

1. சதுராவ்ருத்தி தர்ப்பணம்

ஸ்ரீமானுக உடைய ஸாதகன் ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் துயிலெழுந்து - ஸ்ரீ குரு பாதுகா ஸ்மரணம் செய்து- ஸ்ரீ வித்யா உபாஸனு நித்யான்னிகத்தில் விதித்த ப்ராதக்ருத்யாதிகளை அனுஷ்டித்து- பின் ஸ்ரீ கணபதிக்கு ப்ரியகரமான "சதுராவ்ருத்தி தர்ப்பணம்" —செய்யத் துவங்குகிருன்.

ஸ்ரீ மஹாகணபதிக் கென்றே தனியாக "ஸபர்யா பத்ததி"யை தொகுத்து, வெளியிட்டு உபஹரித்தவர்களும், ஸ்ரீவித்யா மார்த்தாண்ட, ஸ்ரீவித்யா வாசஸ்பதி, ஆகிய விருதுகளைப் பெற்றவர்களும், குஹானந்த மண்டலியில் ஸூர்யனுய் ப்ரகாசித்தவர்களுமாகிய ப்ரஹ்மஸ்ரீ. C. V. ஸ்வாமி சாஸ்த்ரிகள், (ஸ்ரீ அனந்தானந்த நாதாள்) - இந்த "சதுராவ்ருத்தி தர்ப்பணம்" பற்றி எழுதியிருக்கிற குறிப்பு இதோ :-

"ஸூத்தமான தீர்த்தத்தில், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ கலந்து சந்தனத்தையும் கொஞ்சம் கரைத்து வைத்துக்கொண்டு ஸூர்யனை ப்ரார்த்தனை செய்து, அங்குச முத்திரையால் ஸூர்ய மண்டலத்தின் வழியாக ஆகாய கங்கையைக் கொண்டுவந்து, கங்காதேவியை ப்ரார்த்தனை செய்து, அந்த தீர்த்தத்தில் அம்ருத பீஜத்தை ஜபம் செய்து, ஓர் தாம்பாளத்தில் கணேச

யந்த்ரத்தை சந்தனத்தால் வரைந்து, கணபதி மந்திரத்தை ரிஷி சந்தஸ் இவைகளுடன் ஜபம் செய்து, பஞ்ச பூஜை செய்து, முடிவில் கீழ்வருமாறு தர்ப்பணம் செய்யவேண்டும்.

1. கணபதி மூலம்	12	முறை	
2. பின் கணபதி மூலமந்த்ரத்தில் இருக்கும் ஒவ்வொரு அக்ஷரத்தையும் கூறி	112	,,	(28×4)
3. இடையில் மூல மந்த்ரம்	112	,,	(28×4)
4. பிறகு ஆவரண தேவதைகளுக்கு	104	,,	(26×4)
5. இடையில் மூலமந்த்ரம்	104	,,	(26×4)
இவ்வாறு எல்லாம் சேர்ந்து	444		

ஸ்ரீ மஹா கணபதி மந்த்ரத்தை ஸத்குரு மூலமாக உபதேசம் பெற்று தர்ப்பண முறையையும் தெரிந்து கொண்டு 6 மாத காலம் விடாமல் காலை உதயத்திலிருந்து 40 நிமிஷ காலத்திற்குள்ளாக எவன் மிகவும் பக்தி ஸ்ரத்தையுடன் குருவினிடத்திலும் தேவதையினிடத்திலும் திடமான பக்தியுடனும் நம்பிக்கையுடனும் தர்ப்பணம் செய்துகொண்டு வந்தானேயாகில் கண்டிப்பாக ஸ்ரீ மஹா கணபதியின அருளால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பது அனுபவபூர்வமானது.''

ஸ்ரீ கணபதி மஹா மந்த்ரத்தை க்ரமமாக ஒரு ஸத்குருவினிடமிருந்து உபதேசம் பெற்று அவரது பூரண அனுமதியுடன்தான் இந்த சதுராவ்ருத்தி தர்ப்பணம் செய்ய வேண்டும். விவரமாகத்தான் எழுதப் பட்டுள்ளதே என புத்தகத்தைப் பார்த்து செய்தல் கூடாது.

சதுராவ்ருத்தி தர்பணம்

தேவையான பொருள்கள் : 1) வாஸனை கலந்த ஸுத்த மான தீர்த்தம் ஒரு பெரிய பாத்திரத்தில்

2) பஞ்சபாத்ரம்&உத்தரணி

3) சந்தனம் & குங்குமம்.

4) சிறிய கிண்ணம் ஒன்று

5) ஷிதீர்த்தம் கொள்ளும் அளவு தாம்பாளம் அல்லது வாயகன்ற பெரிய கிண்ணம்.

6) புஷ்பம் & அக்ஷதை.

1. தத்வாசமனம் :

ஓம் கம் ஆத்ம தத்வாய ஸ்வாஹா ||
" " வித்யா தத்வாய ஸ்வாஹா ||
" " சிவ தத்வாய ஸ்வாஹா ||
" " ஸர்வ தத்வாய ஸ்வாஹா ||

2. ஸ்ரீ குருபாதுகா ஸ்மரணம்.

(அவரவர் உபதேச ப்ரகாரம்)

3. ஸங்கல்பம் :

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே ||
ஓம்......பூர்புவஸ்ஸுவரோம்.

மமோபாக்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பர மேஸ்வர ப்ரீத்யர்த்தம் (இங்கு தேஸகால வர்த்தமானம்

விரிவாகவும் சொல்லிக் கொள்ளலாம்) மம ஸ்ரீஸித்த லக்ஷ்மி ஸஹித ஸ்ரீ மஹாகணபதி ப்ரஸாத ஸித்தயே ஸர்வவிக்ன நிவாரணார்த்தம் சிந்தித மனோரத அவாப்த்யர்த்தம் சதுராவ்ருத்தி தர்பணம் கரிஷ்யே !

4. ஸூர்ய ப்ரார்த்தனை :

தீர்த்தத்தில் ஒரு கையளவு சதுரஸ்ர மண்டலம் கல்பித்துக் கொள்க— அதில்

ப்ரஹ்மாண்டோதர தீர்த்தானி கரை :
ஸ்ப்ருஷ்டானி தேரவே ।

தேன ஸ்த்யேன மே தேவ தீர்த்தம் தேஹி திவாகர ||
—என்று கூறி ஸூர்யனை ப்ரார்த்தித்துக் கொள்ளவும்

5. கங்கா ப்ரார்த்தனை :

ஆவாஹயாமி த்வாம் தேவி தர்ப்பணாயேஹ
ஸுந்தரி
ஏஹி கங்கே நமஸ்துப்யம் ஸர்வதீர்த ஸமன்விதே ||
—என்று கங்கையைப் ப்ரார்த்தித்து

"ஹ்வாம், ஹ்வீம், ஹ்வூம், ஹ்வைம், ஹ்வௌம் ஹ்வ :" — என்று உச்சரித்து


"க்ரோம்" — என்று அங்குச முத்ரையால் கங்கை முதலான தீர்த்தங்களை ஆவாஹித்து

"வம்" என்ற அம்ருத பீஜத்தால் 7 முறை அபிமந்த்ரணம் செய்துகொள்ளவும்.

6. ஆவாஹனம் :

பிறது சதுரச்ர, அஷ்டதள, ஷட்கோண த்ரிகோண பிந்துவோடு கூடிய மஹாகணபதி யந்த்ரம், தாம்பாளத்தில் எழுதியோ, அல்லது சோண பத்ர கணபதியை வைத்தோ, அல்லது பூஜையில் இருக்கும் கணபதி விக்ரகங்களை வைத்தோ செய்யலாம்.

ஸாதகர்களுடைய சௌகர்யத்திற்காக மேற்படி யந்த்ரம் இதோ போட்டுக் காட்டப்பட்டுள்ளது.



இதில் கணபதியை சிந்தனை செய்து கொள்க.

7. மூலமந்த்ர ரிஷியாதிந்யாஸம்:

(குருபதேச ப்ரகாரம்)

அஸ்ய ஸ்ரீ மஹாகணபதி மஹாமந்த்ரஸ்ய
கணகரிஷி;। நிச்ருத் காயத்ரி சந்த:।
மஹாகணபதிர் தேவதா ||

ஓம் பீஜம் || கம் சக்தி: || ஸ்வாஹா கீலகம்।
மஹா கணபதி தர்ப்பணே விநியோக: ||
"காம்" இத்யாதி கரஷடங்கந்யாஸம்
பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த: ||
த்யானம்:- பீஜாபூர......'விக்னேச இஷ்டார்த்தத: ||
"லம்" இத்யாதி பஞ்சபூஜை.

8. தர்ப்பணம்:

முதலில் ஒவ்வொரு ஆவ்ருத்தி மூலத்தின் கடைசியில் மஹா கணபதிம் தர்ப்பயாமி என்று 12 தடவையும் பிறகு மூலமந்த்ரத்தின் ஒவ்வொரு அக்ஷரத்தின் முடிவில் ஸ்வாஹாவோடு 4 தரமும், ப்ரதி அக்ஷரத்தின் மத்தியிலும் மூலத்தினால் 4 ஆவர்த்தியும், பிறகு 13 ஆவரண தேவதைகளுக்கும் மிதுனங்களுக்கு தனியாகவும் 4 ஆவர்த்தியும் இதற்கிடையில் 4 தடவை மூலமந்த்ர ஆவ்ருத்திகளும் தர்ப்பணம் செய்யவேண்டும்.

மூலம்	12
அக்ஷர சங்க்யை 28 × 4	112
இடையில் மூலம்	112
தேவதைகள் (13 + 13) × 4	104
இடையில் மூலம்	104
	444

3	மூலம் மஹாகணபதிம் தர்ப்பயாமி - (12 தரம்)		
3	ஓம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	ஸ்ரீம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	ஹ்ரீம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	க்லீம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	க்லௌம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	கம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	கம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4
3	ணம் ஸ்வாஹா ।	,,	4
3	மூலம்	,,	4

3	பம் ஸ்வாஹா।	மஹாகணபதிம் தர்ப்பயாமி	4
3	மூலம்	,,	4
3	தம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	யேம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	வம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ரம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	வம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ரம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	தம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ஸம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ர்வம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ஜம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	நம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மேம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	வம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	சம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மாம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	நம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4

3	யம் ஸ்வாஹா। ஸ்ரீ மஹாகணபதிம் தர்ப்பயாமி		4
3	மூலம்	,,	4
3	ஸ்வாம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ஹாம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ச்ரியம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ஸ்ரீ பதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	கிரிஜாம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	கிரிஜாபதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ரதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ரதிபதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மஹீம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மஹிபதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மஹாலக்ஷ்மீம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மஹாகணபதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ருத்திம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ஆமோதம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	ஸம்ருத்திம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4

3	ப்ரமோதம்ஸ்வாஹா। மஹாகணபதிம் தர்ப்பயாமி		4
3	மூலம்	,,	4
3	காந்திம் ஸ்வாஹா	,,	4
3	மூலம்	,,	4
3	ஸுமுகம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மதனுவதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	துர்முகம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	மத த்ரவாம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	அவிக்னம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	த்ராவிணம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	விக்ன கர்த்தாரம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	வஸுதாராம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	சங்கநிதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4
3	வஸுமதிம் ஸ்வாஹா	,,	4
3	மூலம்	,,	4
3	பத்மநிதிம் ஸ்வாஹா।	,,	4
3	மூலம்	,,	4

(444)

9. உத்தரன்யாஸம்:

ஹ்ருதயாதின்யாஸம், த்யானம், பஞ்சபூஜை செய்யவும். பிறகு மூலத்தினுல் முன்போல் மஹாகணபதிக்கு பஞ்சோபசாரம் செய்க.

10. ஸமர்ப்பணம் :

கையில் புஷ்பம் தீர்த்தம் எடுத்துக்கொண்டு—

குஹ்யாதிகுஹ்ய கோப்தா த்வம் க்ருஹாண க்ருத தர்பணம் ।
ஸித்திர்பவது மே தேவ த்வத்ப்ரஸாதான்மயி ஸ்திரா ||
ஆயுராரோக்ய-மைச்வர்யம் பலம் புஷ்டிர் மஹத்யச : ।
கவித்வம் புக்திமுக்திச சதுராவ்ருத்தி தர்பணாத் ||

அனேன க்ருத தர்ப்பணேன பகவான் ஸ்ரீ ஸித்தலக்ஷ்மி ஸஹித : ஸ்ரீ மஹாகணபதி : ப்ரியதாம் ||

—என்று ஸ்ரீ சரணங்களில் அர்ப்பணம் செய்யவும்.

பிறகு தீர்த்த நிர்மால்யம் ப்ரஸாதம் ஸ்வீகரிக்கவும்.

—சுபம்—

2. ஸ்ரீ மஹாகணபதி ஹோமம்

(சுருக்கமானது)

ஸ்ரீ குருப்யோ நம :

1. ஸம்ப்ரதாய குரு ஸ்தோத்ரம்

ஆப்ரஹ்ம லோகாதாசேஷாதா லோகா லோக
பர்வாதத் தி
யே வஸந்தி த்விஜாதேவாஸ்தேப்யோ நித்யம் நமாம்
யஹம் ||

ஓம் நமோ ப்ரஹ்மாதிப்யோ ப்ரஹ்ம வித்யா ஸம்ப்ரதாய கர்த்ருப்யோ வம்சர்ஷிப்யோ நமோ குருப்ய : । ஸர்வோ பப்லவ ரஹித ப்ரக்ஞான க⁴ன ப்ரத்ய கர்த்தோ ப்ரஹ்மை வாஹ மஸ்மி. ஸோக மஸ்மி ப்ரஹ்மாஹ மஸ்மி ||

ஸ்ரீ நாதாதி குருத்ரயம் கணபதிம்
பீடத்ரயம் பைரவம்

ஸித்தெளகம் வடுகத்ரயம் பதயுகம்
தூதிக்ரமம் மண்டலம் ।

வீரான்த்வயஷ்ட சதுஷ்க ஷஷ்டி நவகம்
வீராவளி பஞ்சகம்

ஸ்ரீமன் மாலினி மந்த்ர ராஜஸஹிதம்
வந்தே குரோர் மண்டலம் ||

குரூர் ப்ரஹ்மா குரூர்விஷ்ணு குரூர்தேவோ
மஹேஸ்வர : ।

குரு : ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்மா தஸ்மை
ஸ்ரீ குரவேநம : ||

சிதானந்த மயீம் நௌமி வாமோருன்யஸ்த வல்லபாம்
மூர்த்திம் ஶ்ரீ விக்ன ராஜஸ்ய தசஹஸ்தாம்
சுபாப்தயே
ரமா ரமாபதிமுகை : ருத்யா மோதாதி பிஸ்ததா !
ஷடங்கை : மாத்ருபி⁴ : திக்பை : ஆவ்ருதம் ஸுமுகம்
ப⁴ஜே'

2. த்வார தேவதா பூஜை ||

(ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் ! 3)

1. 3 ப⁴த்ரகால்யை நம : ' (வலது)
2. 3 பைரவாய நம : ' (இடது)
3. 3 லம்போதராய நம : ' (மேல்]

3. தத்வாசமனம் ||

ஓம் க³ம் ஆத்ம தத்வாய ஸ்வாஹா !
,, ,, வித்யா தத்வாய ஸ்வாஹா !
,, ,, சிவ தத்வாய ஸ்வாஹா !
,, ,, ஸர்வ தத்வாய ஸ்வாஹா !

4. ஶ்ரீ குரு பாதுகா ஸ்மரணம்

அவரவர்கள் யதோபதேச ப்ரகாரம் குரு பாதுகா மந்த்ரத்தை ம்ருகீமுத்ரையினால் செய்து கொள்ளவும்.

ஸுமுகாதி முத்ரைகளும் காட்டவும்.

5. க⁴ண்டா பூஜை ||

ஆகமார்த்தம் ச தேவானாம் கமனார்த்தம் ச ரக்ஷஸாம் குர்யாத் கண்டாரவம் தத்ர தேவதாஹ்வான லாஞ்சனம் ||

(- என்று மணியடிக்கவும்)

6. ஸங்கல்பம் ||

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே
மூலேன - ப்ராணு நாயம்ய ||
தேசகாலௌ ஸங்கீர்த்ய-|| ஸுபே---சு பதிதௌ ||

ஸகல வேத ஸார ப்ரணவாகாரஸ்ய ஸகலபுவன பரிபாலனுய-ஊரீக்ருத திவ்ய கஜாவதாரஸ்ய, தூரீக் ருதாகில ப்ரபஞ்ச மாயா காரஸ்ய, தேஹ த்ரயாணும் குணத்ரயாணுஞ்ச மூலபூதே. மூலாதார ப்ரதம சக்ரே க்ருதாலயஸ்ய ஸகல லோக நாயகஸ்ய, இந்த்ராதி தேவதானும் அக்ரஸ்ய, ப்ருதிவ்யாதி பஞ்ச பூத ஸ்வரூபஸ்ய, ஸர்வ வேதஸாஸ்த்ர, யக்ஞ, மந்த்ர தந்த்ர தர்ம கர்மாதி ஸாக்ஷி பூதஸ்ய, ஸம்வத்ஸராதி ஸகல கால ரூபஸ்ய, சரீரஸ்தித இந்த்ரிய தாது, ரஸ வாயு மனஸாதி அந்த: கரண கார்ய காரணஸ்ய, ஸர்வக்ஞத்வ, ஸர்வ வ்யாபகத்வ, ஸர்வ சக்தத்வ ஸ்வரூபஸ்ய, ஸர்வ விக்ன விநாசகஸ்ய, ஸ்ரீ ஸித்தலக்ஷ்மி ஸஹித ஸ்ரீ மஹாகணபதி ப்ரஸாத ஸித்யர்த்தம் ஸர்வ விக்ன தோஷ பரிஹரணேன க்ருத க்ரியமாண கரிஷ்யமாண ஸர்வ புண்ய கர்மணும் ரக்ஷணேன யதாவிதி சாஸ்த்ரோக்த பலோன்முக கர்ம ஸம்பூர்த்யா ஸமக்ர பலவாப்த்யர்த்தம்...... நக்ஷத்ரே......ராசௌ ஜாதஸ்ய......... சர்மண| : .... நக்ஷத்ரே......... ஜாதஸ்யா :.........நாம்யா : தர்மபத்னியா :.........| குமாரஸ்ய :| ...குமார்யா :|)

ஸகுடும்பஸ்ய ஸபுத்ர பௌத்ர கஸ்ய மம க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய ஐஸ்வர்யா| ணும் அபிவ்ருத்யர்த்தம் ஸ்ரீ மஹாகணபதி ப்ரஸாதஸித் ..ர்த்தம் மஹாகணபதி ப்ரஸாதேன ஸர்வ விக்ன

நிவாரணார்த்தம் தந்த்ரோக்த தைவ்யக்ஞ உக்த விதானேன ஸ்ரீ மஹாகணபதி ஹோம கர்ம கரிஷ்யே। கலசாதி பூஜாம்ச கரிஷ்யே।

7. தீப பூஜை

"தீபதேவி மஹாதேவி சுபம் பவதுமே ஸதா யாவத் பூஜா ஸமாப்தி : ஸ்யாத்தாவத் ப்ரஜ்வலஸூஸ்திரா,, என்று தீபத்தில் புஷ்பாஞ்சலி செய்க.

8. மூலமந்த்ர ரிஷியாதி ஜபம் ||

(ஸ்ரீ மஹாகணபதி மூல மந்த்ர ரிஷிந்யாஸாதிகள் செய்து மூலம் '28' ஆவர்த்தி ஜபிக்கவும்)

9. கலச பூஜா ||

கலசத்தை அலங்கரித்து
கலசாய நம : கந்த புஷ்ப தூப தீபை :
ஸகலாராதனை : ஸ்வர்ச்சிதம்.
கங்காயை நம :
யமுனாயை நம :
கோதாவர்யை நம :
ஸரஸ்வத்யை நம :
கங்கேச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின்
ஸந்நிதிம் குரு ।
கலசஸ்ய முகே விஷ்ணு கண்டே ருத்ர
ஸமாஸ்ருதா :। மூலே தத்ர ஸ்திதோ ப்ருஹ்மா
மத்யே மாத்ருகண : ஸ்ம்ருதா : குக்ஷௌது ஸாகரா : ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா। ருகவேதோஸ ப்யதர்வண :। அங்கைச்ச ஸஹிதா : ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா : ||

ஆயாந்து ஸ்ரீ மஹாகணபதி ஹவனார்த்தம் துரிதக்ஷய காரகா : ||

-பின் மூலம் 8 முறை அபிமந்த்ரித்து பூஜோப கரணங்களையும் தன்னையும் புரோக்ஷித்துக் கொள்ளவும்.

10. சங்க பூஜா ||

சங்கம் ஆதாரம் இரண்டையும் அலம்பி சந்தனம் குங்குமம் இட்டு - (கலசத்தின் இடபாகத்தில்) தன் எதிரில், ஸ்தாபித்துக் கொள்ளவும். பின்பு- காயத்ரியால் கலச தீர்த்தத்தை சங்கத்தில் நிறைத்து

சங்காயை நம : கந்தபுஷ்ப தூபதீபை : ஸக லாராதனை : ஸமர்ச்சிதம் என்று பூஜித்து பிறகு தொட்டுக்கொண்டு ஜபம் செய்க (எவ்வாறெனில்)

"சங்கம் சந்த்ரார்க்க தைவத்யம் வாருணம் ச அபி ஷேசனம்। ப்ருஷ்டே ப்ரஜாபதிஸ் தத்ர அக்ரே கங்கா ஸரஸ்வதி த்வம் புரா ஸாகரோத் பன்ன : விஷ்ணுனு வித்ருத : கரே பூஜித : ஸர்வ தேவைஸ்ச பாஞ்ச ஜன்ய நமோஸ்துதே। பாஞ்ச ஜன்யாய வித்மஹே பவன ராஜாய தீமஹி। தன்னோ சங்க : ப்ரசோதயாத்."

பிறகு மூலம் 8 தடவை ஜபிக்கவும். (ப்ரோக்ஷணம் — பூஜோபகரணங்களையும் தன்னையும்!

11. ஆத்ம பூஜை ||

தான் சந்தனம் குங்குமம் தரித்துக்கொண்டு ஹ்ருதயத்தில் அர்சித்துக் கொள்க.

1. ஆத்மனே நம :
2. அந்தராத்மனே நம :
3. ஜீவாத்மனே நம :
4. பரமாத்மனே நம :
5. ஞானத்மனே நம :

12. பீட பூஜா ||

1. 3 தீவ்ராயை நம :
2. 3 ஜ்வலின்யை ,,
3. 3 நந்தாயை ,,
4. 3 போகதாயை ,,
5. 3 காமரூபிண்யை ,,
6. 3 உக்ராயை ,,
7. 3 தேஜோவத்யை ,,
8. 3 ஸத்யாயை ,,
9. 3 விக்னநாசின்யை ,,
10. 3 ஸர்வஸித்தி கடலாஸனய நம :

1. 3 தர்மாய நம :
2. 3 க்ஞானய ,,
3. 3 வைராக்யாய ,,
4. 3 ஐஸ்வர்யாய ,,
5. 3 அதர்மாய ,,
6. 3 அக்ஞானய ,,
7. 3 அவைராக்யாய ,,
8. 3 அனைஸ்வர்யாய ,,

13. த்யான ஆவாஹனாதி உபசாரம்

கையில் த்ரிகண்டாலங்க்ருத புஷ்பாஞ்சலியுடன் கணபதி த்யான ச்லோகம் கூறி ஆவாஹனம் செய்க.

பீஜாபூர கதேக்ஷு கார்முகருஜா
சக்ராப்ஜ பாசோத் பல
வ்ரீஹ்யக்ர ஸ்வ விஷாண ரத்னகலச
ப்ரோத்யத் கராம்போ⁴ருஹ: ।
த்யேயோ வல்லபயா ஸபத்மகரயா
ச்லிஷ்டோஜ் ஜ்வலத் பூ⁴ஷயா
விச்வோத் பத்தி விபத்தி ஸம்ஸ்திதிகரோ
விக்னேச இஷ்டார்த்தத: । ஸ்ரீ

கணானாந்த்வா கணபதிம் ஹவாமஹே ....
......ஸீதஸாதனம்.


மூலம்—

அஸ்மின் ஸ்வஸ்தி பத்மே । யந்த்ரே ।
அக்னே ஸாங்கம் ஸபரிவாரம்
மஹாகணபதிம் த்யாயாமி-ஆவாஹயாமி

ஆவாஹனாதி, ஷடங்கம், மற்றும் கணபதியின் ப்ரிய ஸப்தமுத்ரைகள் காட்டவும்.

(தந்த, பாச, அங்குச, விக்ன, பரசு, லட்டுக, பீஜாபூர)

- ஸ்வஸ்திக பத்மம் -



ஸ்வஸ்திக பத்மம் - வரை முறை

1) அரிசி மாவினால் முதலில் ஒரு சதுரம் வரைக.
2) அதன் மத்தியில் கிழக்கு மேற்காக ஒரு கோடு வரைக.
3) பின் மேற்படி கோட்டின் குறுக்காக தெற்கு வடக்காக ஒரு கோடு வரைக.
4) கிழக்கு முனையை தெற்கு நோக்கி நீட்டி பின்பு அதனை கிழக்கு சதுரக் கோட்டில் இணைக்கவும்.
5) மேற்கு முனையை வடக்கு நோக்கி நீட்டி பின்பு அதனை மேற்கு சதுரக் கோட்டில் இணைக்கவும்.
6) பிறகு தெற்கு வடக்கு கோட்டின் தென் முனையை மேற்காக நீட்டி தெற்கு சதுரக் கோட்டில் இணைக்கவும்.
7) பிறகு அதே கோட்டின் வடக்கு முனையை கிழக்காக நீட்டி வடக்கு சதுரக் கோட்டில் இணைக்கவும்.

மேற்கண்டவாறு இதனை வரைந்த பின்பு வடகிழக்கு பகுதி, தென்மேற்கு பகுதி இரண்டிலும் வெள்ளை அரிசிமாவினாலும் தென்கிழக்கு பகுதி, வடமேற்குப் பகுதி இரண்டிலும் மஞ்சள் பொடியினாலும் நிரப்பவும்.

(இந்த வரைமுறை - "ப்ரபஞ்ச ஸார ஸார ஸங்க்ரஹத்தி"லுள்ளபடி எழுதப்பட்டது.)

ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் மஹாகணபதயே நம :

1. „ ஆஸனம் ஸமர்பயாமி
2. „ பாத்யம் „
3. „ அர்க்யம் „
4. „ ஆசமனீயம் „
5. „ ஸ்நானம் „
6. „ ஸ்நானாநந்தரம் ஆசமனீயம் ஸமர்பயாமி
7. „ வஸ்த்ரோத்தரீயம் ஸமர்பயாமி
8. „ ஆபரணம் „
9. „ யக்ஞோபவீதம் „
10. „ கந்தம் „
11. „ ஹரித்ரா குங்குமம் „
12. „ அக்ஷதான் „
13. „ புஷ்பாணி „

14. அர்ச்சனை

1. ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸுமுகாய நம :
2. „ ஏகதந்தாய „
3. „ கபிலாய „
4. „ கஜகர்ணகாய „
5. „ லம்போதராய „
6. „ விகடாய „
7. „ விக்னராஜாய „
8. „ விநாயகாய „
9. „ தூமகேதவே „
10. „ கணாத்யக்ஷாய „
(6) ஸரஸ்வதீம் ப்ரஹ்மணுச | ருத்ர நேத்ராக்னி தக்தம் காமம் ஜீவயித்வா ரத்யா ஸமயோஜயத் | (7) பூமிமபி வராஹேண | ப்ரபாம் ஸுர்யேன புஷ்டி பதி தபஸா துஷ்ட : தர்சனம் தத்வா ஸாருப்ய மதாத் | யக்ஞமூர்த்தி தபஸா துஷ்ட : தர்சனம் தத்வா ப்ரஹ்மணஸ்பதியக்ஞம் ஸ்வப்ரியகரம் சக்ரே |

ஸ்கந்த தபஸா துஷ்ட: தாரகபேதக சக்திமதாத் தேன ஸஹ வல்லிம் ஸமயோஜயத்। ஏவம் நாநா தேவான் முனீன் வா அனுக்ருஹ்ணீதிதி।

3. அத த்ருதீயோத்யாய:

(1) காச்யப உவாச। ஆத்ம வித்யாம் அனுப்ரூஹிதி। தஹோவாச மரீசி:। கணகோருஷிரஸ் யாஸ்து தேவதா வல்லபேச்வர:। நிச்ருத்காயத்ரீ சந்தோஸ்ய க[3]ம் பீஜம் ஸர்வகாரணம்। சக்திஸ்ஸ்யாத் ப்ரணவஸ்துரிய: ஸ்வாஹாவை கீலகம் ஸ்ம்ருதம்। க[3]ாமித்யாதி தீர்க்[3] ஷட்க: ஷட் பீஜசம்யுதா: க்ரமாத்| ஷடங்கச்சேதி கதி தானியோஜ் யாச்சாகாராதிஷு|

(2) த்யானம்|

பீஜாபூரகதேக்ஷு கார்முகருஜா
 சக்ராப்ஜ பாசோத்பல
வ்ரீஹ்யக்ர ஸ்வவிஷாண ரத்னகலச
 ப்ரோத்யத் கராம் போருஹ:|
த்யேயோ வல்லபயா ஸபத்ம கரயாऽ
 ச்லிஷ்டோஜ்வலத் பூஷயா
விச்வோத் பத்தி விபத்தி ஸம்ஸ்திதி
 கரோ விக்னேச்வரோபீஷ்டத:|

(3) தார: ஶ்ரீசக்தி கந்தர்ப மஹாவிக்னேச்ச பீஜகா:| கணபதேச்சஸம்புத்தி: வரதத்விதயம் தத:| தத: ஸர்வஜனம் மே ச வசமானய ஸம்யுத:| ஸ்வாஹயா ச மஹா மந்தத்ரோஹ்யஷ்டாவிம்சதிவர்ணக:|

(4) சதுர்தம் வரவரதஸம்யுதோ மந்த்ர உத்தம:| காமேசிவரச்சைவ ப்ரீதிதச்சேதி கத்யதே[1] |

(5) ஏவம்பேத த்வயேனைவ மந்த்ரோயம் பரிகீர்த்தித:। ஸம்புத்யந்த மஹா மந்த்ரப்ரஹ்ம பூ[4]யாதிஸாதக: அன்ய: காமப்ரத: ப்ரோக்த: காமினும் சக்தி மார்கத:|

[6] காச்யப உவாச | நாஞகாமஸித்யை மந்த்ரானஸ்ய ப்ருஹீதி || மரீசிராஹ | ஸ்ரீவித்யா கண நாதஸ்ய யோக : காமப்ரபூரக : | க ஏ ஈ லஹ்ரீம் ஷட்பீஜா : ப்ரதம: கண்ட உச்யதே || ஹஸகஹலஹ்ரீம் கணபதே ச வரத - த்விதயம் | த்வீதீய கண்டச்சேதி ஸகலஹ்ரீம் தத : பரம் || ஸர்வஜனம்மே வசமானய ஸ்வாஹா மஹாமனு : | த்ரிசத்வாரிம் சத்வர்ணமனு : தத்யந்த்ரே பூஜ்ய உச்யதே || (7) காயத்ரீ கண நாதஸ்ய ஸம்யோகோ ப்ரஹ்ம தாயக : || புக்திமுக்தி ப்ரதோ ப்ரஹ்ம தேஜ : புஞ்ஜ : ப்ரமோதத : || காயத்ரயா : ப்ரதம : பாத : ப்ரணவேன ஸமன்வித : | வல்ல பேசஸ்ய ஷட்பீஜை : ப்ரதம : கண்ட உச்யதே || ததோ த்வீதீய பாதஸ்து ஸம்புத்தி வரதத்வயம் | த்விதீய கண்ட இதி ச த்ருதீய சரண : தத : || வல்லபேச சிஷ்டபா⁴கா³ : த்ருதீய : கண்ட உச்யதே | த்ரிபஞ்சாசத்வர்ண மந்த்ர : ப்ரஹ்மதேஜ : ப்ரதாயக : ⁴பர்க³வித்யேதி கதிதா வித்யேயம் வேத மார்கிபி : | ஏகாக்ஷரஷடர்ணுப்யாம் பு¹டிதா பூர்வப்ருஷ்டயோ : | காயத்ரீ த்ரிபதா தேவி ப⁴ர்கவித்யாऽ பராஸ் ம்ருதா || (8) பாலாகணேச ஸம்யோக : ஸ்ரீவித்யா காம தாயக : | ப்ரதமம் வாக்பவம் பச்சாத் ஷட் பீஜா : காம பீஜகம் || ஸம்புத்திஸ்ச கணபதே : வரதத்விதயம்தத : || ஸெள : பச்சாத் சிஷ்ட மந்த்ரஸ் ஸ்யாத் பாலா கண பதேர்மனு : | (9) நீலகண்டஸ்ய த்ரக்ஷர்யா : யோ கேனே வவிஷாந்த : | வசமானய ஸ்தானேஷு விஷம் நாசய சோச்யதே | தாரோ ஜ்யோம்ஸ : ஸ : ஜ்யோம் ஸூர்யவஸ்வர்ணச்ச || தத : பரம் ஷட் பீஜாஸ்ச கணேசஸ்ய ஸம்புத்தி : || வரதத்வயம் ஜ்யோம்ஸ : ஸர்வரோகான் ஹர ஹர ஸ : ஜ்யோம் ஸ்வாஹயாமனு : || ஸர்வரோக ஹரோ மந்த்ர : கணேசஸ்ய ப்ரவிஸ்த்ருத : (10) அகோரகண நாதஸ்ய ஸம்யோக : சத்ரு நாசக : | க்ருத்யாபிசார சமன : | ஸர்பாபீஷ்ட ப்ரதாயக : | ஓம் கம் க : ப்ரதமஸ்பு²ராதிச வமாந்தகம் | ஷட்பீஜா வரதாந்தம் ச ஸாத்யம் ச ஸ்வாஹயா மனு : |

[11] க²ண்டத்ரயேஷு கணபதே : ஐம் ப்லூம் யோஜ்ய ஸ ஸாதகம் || வித்யாம் தேஹீ திஸ்வாஹயா ச ஸர்வ வித்யா ப்ரதாயக : | (12) வச்யாதி ஷட்கர்மஸித்யை தத்தத் பீஜேன ஸாத்யத : || ஜபாத் தத்தத்ஸித்தி தாதா வல்லபே⁴சோ க்ருணுநிதி : | [13] ஸர்வஸம்பத் ஸம்ருத்யை ச ஸ்ரீதரா சக்தி பீஜகான் || க²ண்டத்ரயேஷு ஸம்யோஜ்ய ஸம்பதம் தேஹி ஸாத்யகம் | ஸம்யோஜ்ய ச ஜப : கார்ய : ஸம்பத் வ்ருத்யை க்ரமேண ச || ஏவம் தஸ்ய மந்த்ரபேதா : கதிதா : தத்ப்ரஸாதத : ||

4 அததுரியோத்யாய :

[1] காச்யபஉவாச | ததாராதன விதிம் மஹ்யம் ப்ருஹீதி | தத்ஹோவாச கணேசோ மரீசி : | [2] சைவ வைஷ்ணவ ஸௌர சாக்த கணேசைரப்யுபாஸ்யோயம் வல்லபேச : | ஸித்தூர ரக்த சந்தண கணேசாக்ஷகணபத சின்ஹானி | தேஷாம் தாரணம் க்ருத்வா ஜப்யோயம் பூஜனியச்ச | உஷ : காலோ கணேசஸ்யாதிப்ரியங்கர : | அபரான்ஹார்தராத்ரி காலம் விணு அன்யகாலேஷு ஜப : கார்ய : | [3] யஜனம் ச கவச ஹ்ருதயா வ்ருத்தி ஸ்துதி ஸஹஸ்ரநாமஜபானி | மந்த்ர ஸித்தி ஸாதகஹோம தர்பண மார்ஜ்ஜுன்யபி தஸ்ய தோஷதானி | [4] கணேசா க்னௌ ஹோம : ஏகோவா ஷட் மந்த்ராப்யாம் கார்ய : | சதஸஹஸ்ர ஸங்க்யா க்ரமேண வா காலே ஸஹஸ்ரஜப ஏவ வர : | ஸ்வதந்தார்க மூல விக்ரஹே யந்த்ரே சோணுதி சிலாயாம் ச யஜனம் சஸ்யதே | அபிஷேகாய சோண சிலா | லோக கணஸித்யை யந்த்ரம் | தேவதா விக்ரஹ ஸித்யை பிம்பம் | புருஷஸூக்த ப்ரஹ்மணஸ்பதி ஸூக்த ருங் மந்த்ரேஷு சைகேன நித்யம் யஜனம் | சுக்ரவார சதுர்த்யௌ ப்ரியங்கரௌ | [5] பிந்து த்ரிகோண ஷட்கோணஷ்டதள ஷோடசதலவ்ருத்த த்ரய பூபுரத்ரய யுதோயந்த்ர : | பிந்தௌ தாரோ பீஜம் | த்ரிகோணுந்த : சத்வாரோ பீஜா : | ஷட்கோணேஷு ஷட் பீஜா : | க³ாமித்யாதய : ஸந்திஷு | தளேஷு சிஷ்ட

வர்ணு ; | அக்ரேஷு காயத்ரீ | ஷோடசதளேஷு ருங்மந்த்ரா : | மாத்ருகா பீஜ பாசாங்குசா வ்ருத் தேஷு | பூ புரேஷு யந்த்ராங்கானி [6] ரமா ரமேசோ மாமஹேச ரதி கந்தர்ப மஹீவராஹா ப்ரதமாவ்ருத்தி தேவதா : | ஆமோத ப்ரமோத ஸுமுக துர்முகாS விக்ன விக்னகர்தார : த்விதீயாவ்ருத்தே ! | அங்கதே வதா ஸ்த்ரு தீயஸ்ய | துரீயஸ்ய மாதர : | பஞ்சமஸ்ய திகீசா : | தீவ்ராஜ் வாலின் யாத்யா : பீடசக்த்ய : | சூராத்யா த்வார தேவதா : | [7] ஆவாஹனு ஸனுத்யுப சாரை : கார்யம் நித்யார்சனம் | கணேசார்சனபர : ஸர்வவிக்னை : ப்ரமுச்யதே | ஸர்வஸித்திம் லபதே— ~~காம~~ தர்மார்த காம மோக்ஷ ப்ரஹ்ம - பூயானி லபதே இதி | ய இமாம் வல்லபேசோபநிஷதமதீதே | ஸ ஸர்வவிக்னுத் ப்ரமுச்யதே | ஸர்வாபீஷ்டம் லபதே | ப்ரஹ்ம ப்ராப்னோதி | ப்ரஹ்மப்ராப்னோதிஸ்யு பனிஷத் ||

|| ஸஹநாவவது இதி சாந்தி : ||

ஸ்ரீ வல்லபேசோபநிஷத்

(தமிழ் விளக்கம்)

அறிமுகம்

மலையாள லிபியில் ப்ராசீனமாக பாராயண க்ரமத்தில் உபாஸிக்கப்பட்டு வந்த இந்த ஸ்ரீவல்லபே சோபநிஷத், பிற்காலத்தில் நாகர லிபியில் எழுதப்பட்டு ப்ரஸித்தமாக இருக்கிறது. ஸ்ரீகுஹானந்த மண்டலியில் ஸூர்யன். போல் ப்ரகாசித்தவரும் "ஸ்ரீவித்யா வாசஸ் பதி, ஸ்ரீவித்யா மார்த்தாண்ட" என்ற விருதுகளைப் பெற்றவரும், "காணும் ப்ரபஞ்சம் முழுவதும் அகண்ட மான சிவசக்திமயம்" என்ற உண்மையை உணர்த்திய வருமான எங்கள் ஸத்குருநாதர் ஸ்ரீஅனந்தாநந்தநாதர் அவர்கள் (ப்ரம்ஹஸ்ரீ ஸி. வி. ஸ்வாமி சாஸ்திரிகள்) 1961ல் அச்சிட்ட ஸ்ரீகணபதி ஸபர்யா பத்தியில் உள்ளது இந்த உபநிஷத். இந்த ஸபர்யா பத்ததி மறு பதிப்பாகவும், இன்னும் சில அபூர்வ சேர்க்கைகளுட னும் தற்போது 'ஸ்ரீ அனந்தாநந்த ப்ரகாசன்' மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஸபர்யா பத்ததியினைப் புதுப்பித்துக்கொண்டு வருங்காலத்தில் இந்த உப நிஷதத்தை தமிழில் அச்சிட எண்ணமேற்பட்டது. "எந்தரோ மஹானுபாவுலு அந்தர்கி வந்தனமுலு" என்று ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள் கூறியது ஸத்ய வாக்கல்லவா ! தமிழாக்கம் எண்ணம் வந்தவுடனேயே - இந்த உபநிஷதத்துக்கு தெலுங்கில் ஸ்ரீ எனமன்ற வேணுகோபால சாஸ்த்ரி — என்ற ஒரு பெரியவர் விரிவான வ்யாக்யானங்கள் எழுதி வெளிவந்த புத்தகம் கிடைக்கலாயிற்று. எங்கோ மகான்கள் இருந்து நம்மைத் தூண்டுகிறார்கள் என்பது வாஸ்தவமாயிற்று.

மூலம் மட்டுமே தமிழில் வெளியிட எண்ணம் கொண்டுள்ளபோது அதனை தமிழ் வ்யாக்யானத்துடன்

வெளியிட்டால் - ஸ்ரீ மஹாகணபதியின் தத்வங்களை - அனைவரும் தெரிந்துகொள்ள வாய்ப்பாகுமே என்று நினைத்தபோது அந்த தெலுங்கு வ்யாக்யானங்களை படித்து அனுபவித்து வந்தவரும், அடியேனது தீக்ஷா ஜ்யேஷ்டரும் ஸத்குருநாதரின் ப்ரிய சிஷ்யருமான ப்ரம்மஸ்ரீ P. V. B. மஹாதேவ் அவர்கள் - இதற்கு பெரிதும் உதவினார்கள். அந்த தெலுங்கு வ்யாக்யானத்தில் கண்ட கருத்துக்களே இந்த விரிவான விளக்கவுரைக்கு மிகவும் ஸஹகாரியாக அமைந்தது.

அன்பர்களுக்கு ஒன்று தெரிவிக்க அழைத்கிறேன். வ்யாக்யானங்களில் ஏதேனும் பொருந்தாத கருத்துக்கள் சுட்டப்படுமாயின் அது அடியேனின் பாஷாக் ஞானத்தின் குறைபாடே ! குற்றம் பொறுத்து குணம் கொள்க !

உபநிஷதத்தின் ஸமஸ்க்ருத மூலம் "ஸ்ரீகணபதி ஸபர்யா பத்ததி" புதிய வெளியீட்டில் உள்ளது. இங்கே தமிழ் அனுவாதம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

முதல் அத்தியாயம்

1-1. உபநிடதத்தின் துவக்கம்

இந்த உபநிஷதம் - மஹரிஷி கச்யபருக்கும், பகவான் மரீசிக்கும் நடந்த ஸம்வாத ரூபமானது. இதில் கச்யபர் ஸ்ரீவல்லபேசரான ஸ்ரீமஹாகணபதியைப் பற்றின தத்வங்களை மரீசியிடம் வினவுகிறார். காச்யபர் மரீசியின் புத்திரராவார்.

இதில் "ஸஹநாவவது" சாந்தி பாடம் — முதலில் சொல்லப்படுவதால் யஜுர்வேதத்தின் பாற்பட்டதாகக் கொள்ள இடமிருக்கிறது.

ஸ்ரீசங்கர பகவத் பாதர் அவர்களால் ஸித்தாந்தப் படுத்தப்பட்ட ஷண்மதங்களும்-அதனதன் அதிதேவதை

கள் கேவலம் ப்ரஹ்மமே - என்பதைத் தெள்ளத் தெளி வாக உணர்த்துகின்றன. இதில் காணுபத்யத்தின் அதி தெய்வம் ஸ்ரீ மஹாகணபதி. அவரின் ஒரு பெயர்தான் வல்லபேசர். அதாவது வல்லபையின் கணவர். (வல்லபைதான் ஸித்தலக்ஷ்மி. இவள் மரீசியின் புத்ரி. இவ்விவரங்கள் இரண்டாம் அத்தியாயத்தில் வரு வதைப் பார்க்கலாம்). வல்லபைக்கு ஈசர்.

முதலில் கச்யபரின் கேள்வி. வல்லபா யார்? வல்லபேசர் யார்?

மரீசியின் பதில். ச்ருஷ்டிக்கப்பட்டுள்ள லோகங்கள் எண்ணிலடங்கா. இப்படி அனேக கோடிக்கணக்கான ப்ரும்மாண்டங்களின் உற்பத்திக் காரணமாகவும், அப்படிப் பட்டப்ரம்ம சக்தியின்-அதாவது பரப்பிரம்மத் தின் பட்டமகிஷியாகவும் எல்லாவற்றிற்கும் மூலப்பிரக் ருதியாகவும் உள்ளதுதான் மாயை. மாயை எப்போதும் ஸ்திரிலிங்கமாக உருவகப்படுத்தப்படுவதால் அவளே ஸித்தலக்ஷ்மியாக அதாவது வல்லபையாக இருக்கிறுள். எனவே, மாயாசக்தியால் ஸ்புரிக்கப்பட்ட தன்மையில் -பரம்பொருள் வல்லபேசராகிறது. அதாவது மாயை யாகிற வல்லபாவின் கணவரே வல்லபேசர். மேலும் -

இதனை எங்கள் ஸத்குருநாதர் ஸ்ரீ அனந்தா நந்த நாதர் அவர்கள் ஸ்ரீகணபதி ஸபர்யா பத்ததியில் ஸ்ரீவல்லபேசரை "ப்ரஹ்மசக்திரூப ஸித்தலக்ஷ்மி யாச்லிஷ்டம்" என்று விளக்கியிருக்கிறார்.

1.2. கணபதியின் ஸ்வரூபம்

கச்யபரின் கேள்வி : கணபதி எப்படிப்பட்டவர்?

மரீசியின் பதில் : ச்ருஷ்டிக்கப்பட்ட முதல் தேவர் களான ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ரர்களை அநாதி ப்ரஹ்மர் கள் என்று சொல்லப்படுகிறது. இந்த ச்ருஷ்டி தோற்றத் துக்கு மூலகாரணமாக உள்ளது— மஹதாதிதத்வங்கள்.

நாம் ப்ரபஞ்சங்களிலே உள்ள ஜீவராசிகளின் மூலக் கூறுகளே அணுக்கள் என்பதுபோல - ப்ரபஞ்சங்களிலே உள்ள தேவர்களேயும் தத்வங்களேயும் "கணங்கள்" என்கிறார்கள். எனவே, அநாதிப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர் களாகவும், மஹதாதி தத்வங்களாகவும் உள்ளவர் இந்த பரம்பொருளான வல்லபேசர் ஆனதினாலே இவர் கணபதி எனப்படுகிறார்.

1.3. கஜஆனனர் | (கஜானனர்)

கேள்வி : கஜானனர் என்ற பெயர் எப்படி வந்தது?

பதில் : ஆதியில் மூலப்ரக்ருதியாய் உள்ள மாயை புருஷாகாரத்துடன் சேரும்போது நாம வடிவம் ஏற்படுகிறது. இங்கு வல்லபேசரின் தத்துவம் ப்ரஹ்ம தத்துவமாக பரிணமித்திருப்பதினாலே இவரு ஡டைய ஸ்வரூபத்தை "நரகஜஆக்ருதி" எனலாம். இதில் நராகாரம் மாயையாகவும், கஜாகாரம் புருஷனுகவும் சொல்லப்படுகிறது. இப்படி ப்ருக்ருதியோடு புருஷன் அபேதமாக ஒன்றி இரண்டறக்கலந்த ஆக்ருதியை தரித்திருப்பவர்தான் ஸ்ரீ கஜானனர் எனப்படுகிறார்.

1. 4. தசபுஜ தத்துவம் |

கேள்வி : 10 (புஜங்கள்) கைகள் ஏன் ?

பதில் : அண்டங்களின் உற்பத்தித் தொடக்கத்தில் சிவமாயிருந்தது பரம்பொருள். அதற்கு சக்திஸ்புரணம் ஏற்பட்ட காலத்தில் ஏற்பட்டசலனங்கள் ஸூக்ஷ்ம பூதங் களாக அமைந்தன. இவையே சப்த, ஸ்பர்ச ரூப, ரஸ, கந்தம் என்ற தன்மாத்ர பஞ்சகமாம். இந்த தன்மாத்ரையான ஸூக்ஷ்ம பூதங்களிலிருந்து ஸ்தூல பஞ்சபூதங்களான ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருத்வீ என்ற ஐந்தும் அந்தந்த பூதங்களுடைய குணங்களுடனேயே ஆவிர்பவம் ஆனது. இந்த நிலையை 'ஸமஷ்டி விச்வம்' எனலாம். எனவேதான் இந்த விச்வம் என்கிற அண்டங்கள் அத்தனையும் பஞ்ச

பூதாத்மகமாகத்தான் இருக்கிறது. எனவே, இந்த விச்வத்தை உற்பத்தி செய்த உற்பத்திக்காரணர் பரம் பொருளான ப்ரஹ்மம். இவர் உற்பத்தி செய்ததோடு மட்டுமல்லாமல் அதனுடைய ஒவ்வொரு கூறிலும் அவரே அனுப்ரவேசித்து அந்தந்த ரூபங்களில் ஒவ்வொன்றிலும் ஸத்ரூபமாகவும், அஸத்ரூபமாகவும் விரவி இருக்கிறார். இந்த தைத்ரீய உபநிஷதமே ப்ரமாணம்.

"த்ரிவிதாத்மகம். விச்வம் ஜகத் தத்ச்ருஷ்ட்வா ததனுப்ரவிச்ய"

மேலும் கைவல்யோபநிஷத்தும்,
"அணோரணீயானஹமேவ தத்வன்,
மஹானஹம் விச்வமஹம் விசித்ரம்
புராதனோऽஹம் புருஷோऽஹமீசோ
ஹிரண்மயோऽஹம் சிவரூபமஸ்மி ||

என்று அணுவுக்கும் அணுவாகத்தான் குறிப்பிடுகிறது. இவ்வாறு பரம்பொருளான ப்ரஹ்மமாக இருப்பவர் தான் வல்லபேசர் என்பதும், ப்ரஹ்மத்தின் அபேத ஆக்ருதிதான் இவர் என்பதும் உறுதியாகிறது.

1. 5

த்ரிவிதாத்மகமாக (முக்கூட்டாக) உள்ள இந்த ஜகத்தின் விகாரம் இங்கு விரிவாக்கப்படும் காலத்தில் இந்த ஜகத்தையே ஒரு புருஷாக்ருதியாக கண்டோ மானால் அதனுடைய கழுத்துக்கு கீழே உள்ள பாகம் நராக்ருதி - மனிதவடிவம். அதன் தலை துரீயமான ப்ரஹ்மம் அதாவது ஈச்வரன் (மாயாகார நரசரீரம் கண்டாऽதஸ்தாத், புருஷாகார கஜவதனம் கண்டோபரி- ஸ்ரீ கணபதி ஸபர்யா பத்ததி பூமிகா). இப்படி ஜகத்தும் ஈச்வரனும் அபேதமான நிலைதான் ப்ரஹ்மத்தின் ஐந்தாவது நிலை துரீயாதீதம் இதுவே ஸத்யமானது. 'கல்பிதமான மித்யாபேதங்களுக்கு அதிஷ்டானமாகும்

அபேதமே ஸத்யமானது'' என்று வேதாந்தஸிம்ஹ மான ஸ்ரீசிதாநந்தநாதர் அவர்கள் விளக்கம் அளித் திருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இந்த ப்ரஹ்மம் வ்யாக்ருதமாயும், அவ்யாக்ருத மாயும் உள்ள நிலைகளில் ப்ரவேசித்து அந்தர்யாமியாக ஆனது. இப்படி ஒரே ப்ருஹ்மம் ஐந்து நிலைகளில் விளக்கப்பட்டதினால் வல்லபேசரே ஆதிபரம்பொருள். பிறகு

1. 6.

ஆகாசத்திலிருந்து புஷ்டிபதியும், வாயுவான மனஸி லிருந்து ரதிபதியும், அக்னியிலிருந்து கிரிஜாபதியும்; ஜலத்திலிருந்து ரமாபதியும்; அன்னத்திலிருந்து பூமிபதியும்; தங்கள் தங்கள் சக்திகளோடு ச்ருஷ்டிக்கப் பட்டார்கள். இப்படி சக்திகளோடு கூடிய ஐவருக்கும் தங்களோடு பின்னப்படாத ஆக்ருதி விகாரமாக இருப் பதினாலேதான் இந்த ஐவருடைய பத்து கைகளும் பரம்பொருளான வல்லபேசருடைய பத்து கைகளாக கூறப்படுகிறது.

மன்மன மெங்குண்டு வாயுவுமங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவுமங்கில்லை-திருமூலர்.

1. 7. ஆயுதங்கள் :

வல்லபேசருடைய கைகளிலே உள்ள ஆயுதங்களின் விவரம் வர்ணிக்கப்படுகிறது.

கதை	-	வராஹமூர்த்தியின்	அடையாளம்	1
நெல்கதிர்	-	பூமியினுடைய	,,	2
சக்கரம்	-	விஷ்ணுவினுடைய	,,	3
சங்கம்	-	லக்ஷ்மியினுடைய	,,	4
த்ரிசூலம்	-	ருத்ரனுடைய	,,	5
பாசம்	-	கௌரியினுடைய	,,	6
உத்பலம்	-	ரதியினுடைய	,,	7

கரும்பு - மன்மதனுடைய	அடையாளம்	8
மாதுளம்பழம் - புஷ்டியினுடைய	,,	9
தந்தம் - புஷ்டிபதிதினுடைய	,,	10

இப்படி பத்தின் அபேதாக்ருதிமயமாக உடைய கழுத்துக்குக் கீழே உள்ள உருவத்தின் ப்ரதீகமாக உள்ளவர் தான் வல்லபேசர்.

ஆயுதத் தத்துவங்களின் (காண்க. பூமிகா) விளக்கங் களை இனி காணுவோம்.

1. கதை :

அவித்யா கார்ய மஸ்தகபேதி வித்யாரூப கதாம்.

"கார்ய ஸஹித அவித்தைக்கு அதிஷ்டானமாய் தனது இருப்பால் அவற்றை போஷித்துக்கொண்டுள்ள ப்ரும்ம ஸ்வரூபமாகும் ஸாமான்ய ஞானமானது, ச்ரவணமனன நிதித்யாஸனாதிகளால் பரிபக்குவமான ஸுத்த அந்தகரண அகண்டாகார வ்ருத்தியில் ப்ரகடமாய் வெளிப்பட்ட காலத்தில்" * அது கார்யத்தோடு கூட கதையாகி, அவித்தையாகிற மஸ்தகத்தை [தலையை] பேதிக்கிறது.

* ஸ்ரீ சிதானந்தநாதர் அவர்களின் ஸ்ரீ பகவத்கீதா தத்வ ஸங்க்ரஹம்.

2. நெல்கதிர் :

"ஜீவ மோதகர வ்ரீஹ்யக்ரம்."

மோதம் என்றால் மகிழ்ச்சி.

ஸ்ரீ வல்லபேசர் துக்க நிவ்ருத்தியும் சுகப்ராப்தியுமான மோக்ஷத்தை ஜீவர்களுக்குத் தருபவர். இதன் அடையாளமாக அவர் தனது கையில் நெற்கதிர்களை வைத்திருக்கிறார். "நீலதோயத மத்த்யஸ்த்தாத் வித்யுல் லேகேவ பாஸ்வரா நீவாரசூகவுத்தன்வீ பீதா பாஸ்வத்யனூபமா தஸ்யாசிகாயா மத்த்யே பரமாத்மா

வ்யவஸ்தித : ஸப்ரஹ்ம ஸசிவஸ் ஸஹரி ஸஸேந்த்ரஸ் ஸோ க்ஷர : பரம : ஸ்வராட்"

என்று தைத்ரீயம் கூறும் பரம்பொருள் ஸ்ரீமஹா கணபதியான வல்லபேசர்தான் என்பதை இது உணர்த்துகிறது.

3. சக்ரம் :

சக்ரம் - ஸம்ஸார ரூபமானது. 'புனரபி ஜனனம் புனரபி மரணம்' என்றபடி ஜன்மா திரும்ப திரும்ப வந்துகொண்டும், சுகம் துக்கம் ஆகியவை மாறி மாறி வந்துகொண்டும் இருப்பதே ஸம்ஸாரமல்லவா ?

"ஸம்ஸார ரூபசக்ரம்"

இந்த சக்ர கதியை நிறுத்தவே தான் ஸ்ரீ வல்லபேசர் தனது கையில் சக்ரத்தை வைத்திருக்கிறார்.

4. சங்கம் :

சங்கம் உத்கோஷிக்கிறது. அதாவது நாதத்தை வெளிப்படுத்துகிறது. அதனால் நித்ரை கலைகிறது எப்படிப்பட்ட நித்ரை ? அஞ்ஞானமாகிற நித்ரை. எனவே ஜீவர்களின் அஞ்ஞானமாகிற நித்ரையை கலைக்கவே நாதரூபமான சங்கத்தை கையில் வைத்திருக்கிறார். அதாவது,

"அக்ஞான நித்ரோத்போதகர நாதகர சங்கம்."

5. த்ரிசூலம் :

"த்ரிபுடிரூப த்ரிசூலம்."

த்ரிசூலம் மும்முனைகள் கொண்டது. இது த்ரிபுடி ரூபமானது. த்ரிபுடி என்பது மும்மலங்கள், மூன்று அவஸ்தைகள், முக்குணம், ப்ரபஞ்சங்கள் என்று மூன்றின் கடப்பாடு உடையது. இதனை பேதிக்க வேதான் த்ரிசூலத்தை வைத்திருக்கிறார்.

6. பாசம் :

"ராகரூப பாசம்"

ராக : பாச : என்கிறது பாவனோபநிஷத். எனவே, நமது ஆசையே பாசமாக ஸ்வாமியின் கையில் இருக்கிறது. அவர் ஜீவர்களின் ஆசைகளை பூர்த்தி செய்கிறார்.

7. உத்பலம் :

"சுத்தக்ஞான விகஸிக ஹ்ருதய் ரூப உத்பலம்".

உத்பல புஷ்பத்தை இருதயத்துக்கு ஒப்பாகக் கூறுவார்கள். இது சுத்தக் ஞானத்தால், விதவிதமாக இருக்கின்றது. மலர்ந்து இருக்கிறது. எனவே, ஹ்ருதயத்தில் சுத்தக்ஞானம் பிரகாசிக்க வேண்டி நிமித்தம் உத்பலம் அவர் கையிலிருக்கிறது.

8. கரும்புத்துண்டு :

"மனோரூப இக்ஷு கார்முகம்"

கரும்புத்துண்டு மனோரூபமானது. 'மன இக்ஷு தனு:' என்பது பாவனோபநிஷத். மனோரூபேக்ஷு கோதண்டா என்பது ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்.

9. மாதுளம்பழம் (பீஜாபூரம்)

"அவித்யாவாஸனுபீஜ பூர்ணமாயாரூப பீஜாபூர பலம்"

சிறிய விதைகளுடன் முழுவதும் நிறைந்தது இது. இந்த விதையின்மேல் ரஸமுடைய பாகம் ஒன்று ஒவ்வொரு விதையினையும் மூடியிருக்கிறது. இந்த விதைகள் யாவும் (மறுபடியும் முளைக்கும்படியான நிலையில் இருக்கிறது) அவித்யாவாஸனைகள். இப்படி அவித்யாவாஸனைகள் நிறைந்த மாயாரூபமான இந்த பிரபஞ்சத்தை பீஜாபூரம் உணர்விக்கின்றது. பிறவிக்

காரணமான வினைகள் யாவும் ப்ரஹ்மத்தின் கையில் பீஜரூபத்தில் இருக்கிறது.

இதை உணர்விக்கத்தான் ஸ்ரீமஹாகணபதி இதை கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்.

10. தந்தம் :

"கண்டஞானரூப பின்னதந்தம்."

உடைந்த தந்தம். இது கண்டகண்டமாக உள்ள ஞானத்தைக் குறிக்கும். அதாவது ஜீவர்களின் கண்ட ஞானம். அகண்டமாக ஆகவேணும் என்கிற நிலை திடப்படவேதான் இந்த உடைந்த தந்தத்தை கையில் வைத்திருக்கிறார்.

1. 8 ரத்னகலசம் :

முன்பே விளக்கப்பட்ட த்ரிவிதாத்மகமான ஜகத்துக்கு அப்பாற்பட்ட துரீயமான சிரஸே ப்ருஹ்மம் எனக்கண்டோம். இதுதானே கஜாகாரமாக ஆகியுள்ளது. எனவே, இதனுடைய சின்னமாக தும்பிக்கை கூறப்படு கிறது. இந்த தும்பிக்கையிலே வைத்திருக்கிற ரத்னகல சத்தையும் இங்கே ஒரு ஆயுதமாக கொள்ளப்படுகிறது. பலவிதமான ரத்னங்கள் நிறைந்த ரத்னகலசம் இது. ப்ரபஞ்சங்களிலே இறைந்து, நிறைந்து கிடக்கிற ரத்னங் கள் ஞானத்துக்கும் விக்ஞானத்துக்கும் உவமையாக பெரியவர்கள் சொல்வதுண்டு. தத்வமயமான வல்லபேசர் தும்பிக்கையிலே வைத்திருக்கிற ரத்னகலசத்துக்கும் ஒரு தத்வமயமான விளக்கத்தினை தத்துவ தர்சியான நமது குருநாதர் – ஸ்ரீ அனந்தாநந்த நாதர் அவர்கள் தன் பூமிகையில்,

"ஞானவிக்ஞானரத்னபூரித அமிர்த ரத்ன கலசம்."

என்று விளக்குகிறார்கள். இப்படியாக 11 ஆயுதங்களோடு பதினோரு கைகளோடு கூடி விளங்குபவர்தான் வல்ல பேசர். இவரது பரம்பொருட் துல்யமான தன்மை இங்கு மற்றொரு விதமாகவும் தெரியவருகிறது.

யஜுர் வேதத்தில் ப்ரகாசிக்கும் ஸ்ரீ ருத்ரம் சிவனே பரம்பொருட் துல்யமாக சொல்வதால் - அந்த ருத்ரஸ்வரூபம் ஏகாதசருத்ர வடிவில் வணங்கப்படுவது தெரிந்ததே - இங்கு ருத்ரனுக்கும் மேம்பட்ட நிலையில் வல்லபேசருக்கு அவரது வடிவங்களே கைகளாக இருப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இதற்கடுத்து சாக்தத்தில்- வேதப்ரமாணமான தேவி உபநிஷதத்தில் எல்லாம் வல்ல சக்தியே ஏகாதச ருத்ரர்களாக இருப்பதாக வர்ணிக்கப் பட்டிருப்பதும் அதாவது" ஸைஷேகாதசருத்ரா ;" என்று கூறப்பட்டிருப்பது ஒப்பு இங்கு நோக்கத்தக்க ப்ரமாணமாகும்.

1. 9. நிறமும் கண்களும் :

கேள்வி : அவர் ஏன் சிவப்பு வர்ணமாக இருக்கிறார் ?

பதில் : வர்ணங்கள் ஏழில் முதலாவதாக உள்ள வர்ணம் அதாவது தோற்ற நிலையிலே இருந்த வர்ணம் சிவப்பு. இதுவே ரக்தவர்ணம். நிறமில்லாத சுக்லத்துடன் சேருவது ரக்தமல்லவா சக்தி தத்வமே சிவப்பு தானே ! "ஸகுங்கும விலேபனாம்" என்றுதானே அம்பாள் வர்ணிக்கப்படுகிறாள் !

எனவே, ஆத்ய சக்திக்கு ஸ்வபாவம் சிவப்பு. இதனால் ஆத்யதலைவராக, முதல் பரம்பொருளாக, வல்லபேசர் விளங்குகிறார். அக்ரஸ்தானம் வகிக்கிறார். எனவே, முதல் தெய்வத்துக்கு முதல்நிறம் இயல்பு, உரிமை என்பதாலே, அவருக்கு சிவப்புநிறம் சொல்லப் பட்டது.

கே : மூன்று கண்கள் ஏன் ?

ப : "ப்ரபஞ்சத்ரய ஸாக்ஷிபூத த்ரிநேத்ரம்-"

ப்ரபஞ்சம் முக்கூறாக உள்ளது. காலம், தேசம், வஸ்து எனவும் ; பூ: புவ:ஸுவ : எனவும் ; ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி எனவும் விளக்குவார்கள். இந்த மூன்றையும் ஒரே ஸமயத்தில் காண்பது

என்ற நிலை - இந்த மூன்றில் நடைபெறும் செயல் பாட்டுகளில் எவ்விதமான தொடர்பும் அற்ற நிலை - அதாவது ஸாக்ஷி நிலை. இந்த த்ரிபுடியை ஸ்ருஷ்டித்த வல்லபேசர் இதனையெல்லாம் ஸாக்ஷியாக நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார். அதனால் இவருக்கு மூன்று கண்கள்.

1.10 சந்த்ரசூடர் :

கே : வல்லபேசர் ஏன் தலையில் சந்த்ரனை சூடியிருக்கிறார் ?

ப : இந்த ஜகத்தானது த்ரிகுணாத்மகமானது. அதாவது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்றினுடைய கூட்டுப்பொருள்தானே இந்த ஜகத் ! எப்போது இந்த ஜகத்தானது குணங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறதோ அப்போதே இது நாசமுடையது என்பது வெளிப்படை. அதாவது இந்த "ஜகத் ம்ருதம்" அடுத்து வல்லபேசரோ இங்கு துரீய ப்ரஹ்மமாக விளங்குவது தெரிந்ததே ! அதாவது இவர் நாசமில்லாத தன்மையுடையவர். அம்ருத ஸ்வரூபம். இந்த துரீய நிலையில் ஸித்திக்கக்கூடிய மோக்ஷம் என்பது - ஸர்வானர்த்த நிவர்த்தியும் பரமானந்த ப்ராப்தியுமான அம்ருத நிலை என்பதை ஸ்ரீ சிதானந்தநாதர் பல இடங்களில் சுட்டுகிறார். நமது ஸநாதன வேதமும் வேதாந்தமும் நான்காவது நிலையை அம்ருத நிலையாகத்தானே சொல்கிறது. கர்மாவாலோ, தனத்தாலோ, பிரஜைகளினாலோ அடையப்படாத நான்காவது நிலை ப்ரம்மமல்லவோ வல்லபேசர் !

முன்பே - சிரஸாக உள்ள துரீய பிரம்மமே வல்லபேசர் என்று உபநிஷத் கூறியிருக்கிறது. மேலும் த்ரிபாதமான காயத்ரி மட்டுமே ஒரு ஸாதகனை மோக்ஷமாம் அம்ருத நிலைக்கு இட்டுச் செல்லாது என்றும், அதனுடன் துரீயபாதமாக துரீய காயத்ரீ சேர்ந்தபோதேதான் ஆனந்த நிலையான

அம்ருத நிலை அடையலாம் என்பதை குருவருள் உணர்த்தி வந்திருக்கிறது. இது இங்கு பொருத்தமாக அன்வயப்படும் அழகை அறிஞர் ரஸிக்கலாம். இந்த அம்ருத நிலைக்கு உதாரணமான ரூபம் சந்த்ரனுடையது. அதாவது அம்ருத ப்ரதீகமாக இருப்பது. சந்த்ரனது 16 கலைகளில் முதலாவது உள்ளது அம்ருத கலை. 16 என்ற எண்ணும் அம்ருத ப்ரதமானதுதானே! மித்யாபூதமான ஜகத்திலிருந்து வேறுபட்டு- துரீயபாதத்திலே நிற்கும் அதாவது அம்ருத நிலையிலே இருப்பவர்" வல்லபேசர் என்பதை நமக்கு தெள்ளிதின் உணர்த்தவே சந்த்ரனை தன் சிரஸிலே சூடியிருக்கிறார்.

1. 11. சிந்தாமணி த்வீபத்தின் தலைவர் :

கே : இவர் ஏன் சிந்தாமணி த்வீபத்துக்கு (தீவுக்கு) தலைவரானர் ?

ப : காணும் இந்த ஜகத் த்ரிபூடி ரூபமாகவும், செயல்பாட்டு வடிவமாகவும் (action stage) இருப்பதால் அவித்யா மயமானதாக இருக்கிறது. அவித்யை என்னும்போது வித்தையும் இருந்தாக வேண்டும். வேதாந்தம் பகருகிறது ;- அக்ஞான ஆவ்ருதம் ஞானம். இருட்டு என்ற ஒரு வஸ்து இல்லை. அது ஒளி இல்லாததால் தோன்றும் நிலை. இதுபோன்று வித்யையை அவித்யை மூடித்தான் இருக்கவேண்டும். அவித்யையும் அக்ஞானமும் ஒன்றுதான். எனவே, வித்யாமயமாக இருக்கிற பரம்பொருள், ஞானரூபமாக இருக்கிற பரம் பொருள், ஞானரூபமாக இருக்கிற வல்லபேசர்- மித்யையாயும், அவித்யையாயும் இருக்கும் இந்த அவித்யா ஜகத்துக்கு அப்பால் துரீய நிலையிலே இருப்பவர் அதாவது அவித்யை நீங்கிய காலத்தில் வெளிப்படுபவர். இந்த அவித்யையும் வித்யையும் ஸ்புரிக்குமிடம் எது என்றால் சித்தம். எனவே, இந்த துரீய ப்ரஹ்மமான வல்லபேசர் ஒருவருடைய சித்தத்திலே ப்ரகாசிக்க வேண்டுமானால் அவன் துரீய ஸ்திதியை அடைந்தால் தான் ஸாத்யமாகும். இதனால்தான்-அவர் சிந்தாமணி

த்வீபத்துக்கு தலைவராக இருந்து ஒரு ஸாதகனுடைய சித்தத்தை மணிபோல ப்ரகாசிக்கச் செய்து அருள் செய்கிறார். அவரை வழிபடுபவர்கள் தன்னுடைய அந்த:காரம் நீங்கி தேஜோமயமான சித்தவ் ருத்தியோடு கூட அவருடைய பதத்தை அடையலாம் என்பது இங்கு உறுதியாகத் தெரிகிறது.

1.12 மும்மூர்த்திகளும் அவரே :

கே : வல்லபேசர் எப்படி இந்த ப்ரபஞ்சத்துக்கு உற்பத்தி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்பவராக ஆனார் ?

ப : முன்பு கூறியபடி வல்லபேசர் "ப்ரபஞ்சோத்பத்திரக்ஷாவிநாசககர" தலைவராக இருப்பதை நினைவு கொண்டு பார்ப்போம். ஸ்ருஷ்டியில் தொடக்கத்தில் பரம்பொருளானது - குணங்களிலிருந்து வ்யஷ்டியாக, ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ரர்களை உண்டாக்கி அவர்களுக்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்கிற தொழில்களை கொடுத்து அவர்களுக்கு தலைவராகவும், அதே சமயத்தில் அவர்களுடைய ஆத்ம சைதன்யமாகவும் அவரே ஆனார் அல்லவா ! அவர் தானே வல்லபேசர். எனவே இந்த முத்தொழிலுக்கும் அவரே காரணமானவராக ஆனதினாலே காரண கர்த்தாதான் ஒரு காரியத்தின் முதல் கர்த்தாவாக இருப்பது என்ற நிலையிலே இங்கு வல்லபேசர் ஸ்ருஷ்டி ஸ்திதி, லயகாரர் ஆகிறார். என்பது புலனாகிறது.

1.13 விக்னராஜர் :

கே : வல்லபேசர் விக்னங்களுக்கு ராஜாவானார் என்பது எவ்வாறு ?

ப : ஸ்ரீ அனந்தாநந்தநாதர் அவர்கள் விக்னங்களைப் பற்றி கூறும்போது "கால ரூப விக்ன ஹரம்" என்று கூறுகிறார்

ஒரு காரியத்தை செய்ய அல்லது எண்ணத்தை நினைக்கவிடாமல் அதற்கு எதிரிடையான எண்ணங்கள் தடைகளாக ஏற்பட்டு நினைத்ததை முடிக்க விடாமல் செய்வதற்கு "விக்னங்கள்" என்று பெயர். வேதாந்தம் விக்னத்தை காலரூபமாகத்தான் கூறுகிறது. எவ்வா றெனில், - காலம் மூன்று நிலையாக இருக்கிறது. அதாவது ஜகத்ரூபம், ப்ரதிபந்தகம், ஸத்யா/பாவ ரூபம் என்று.

ஸத்பாவ-ரூபம்- பரம்பொருள்-ஈஸ்வரன்

ஜகத்ரூபம் - ஜீவனாக இருந்து கொண்டு உலகியல் வாழ்வில் உழன்று உலகமே சதம் என்று நினைப்பது.

ப்ரதி பந்தகம் - இப்படி ஈஸ்வரனாகஉள்ள உலகத்தை ஜகத்தாக - ஜீவனாக பார்க்கும்படி ஏற்பட்ட இடையூறு.

எனவே இடையூறான ப்ரதிபந்தகம் ஒழிந்தால் தான். இந்த விக்னம் நீங்கினால்தான் ஈஸ்வர நிலையை உணரமுடியும். மேலும் கால, தேச, வஸ்துவாகவும் விக்னங்களை கூறலாம். இப்படியாக, காலரூபமான விக்னங்களை யெல்லாம் நியமனம் செய்வது யார்? இந்த வல்லபேசரான விக்னராஜர் தான்.

அஸுரர்களுடைய தபஸ், ஜகத்தின் அழிவுக்கு அதாவது நல்லவர்களுடைய செயல்களுக்கு இடையூறு ஏற்பட காரணமாக நிகழும்போது அந்த தபஸுக்கு விக்னங்களை ஏற்படுத்துகிறார். மேலும் அவதார புருஷர்கள் அஸுரர்களை வதம் செய்ய, முனையும் போது (வதம் நிகழ வேண்டியது அவசிய மானதினாலே) அதற்கு ஏற்படும் விக்னங்களை நீக்கு கிறார். விக்னங்களை கொடுக்கும்போது கொடுத்து, நீக்கும்போது நீக்கி இருகாலங்களிலும் அவரே காரண மாக இருக்கிறார்.

"மஹா கணேச நிர்பின்ன விக்னயந்திர ப்ரஹர்ஷிதா" என்கிறது. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்.

இந்த ஜகத் ரூபமான விக்னங்களை ஜகத் வியாபார ரீதியில் ஸ்ரீ கணேச கீதை விவரிக்கிறது.

விக்னங்கள் மூன்று வகைகள்

அ) வ்யாதிஸ்தானம் (மனமெலிவு)

ஆ) சந்தேஹம் முதலியன, துர்மனத்தன்மை (மனச் சஞ்சலம்) முதலியனவும், தன்னால் ஏற்படும் விக்னங்கள்.

யக்ஷ, ராக்ஷஸ, மிலேச்சர், திருடர்கள், வேடர் இவர்களால் ஏற்படுவதுமான, பிறரால் ஏற்ப்டும் விக்னங்கள் :

இதர பாஷாண்ட மதங்களினால் ஏற்படுவது. சாஸ்த்திரங்களினால் ஏற்படும் விக்னங்கள் :

எனவே காலரூபமான ஜகத்ரூப விக்னங்களை வல்ல பேசர் ஒருவரால்தான் நிவர்திக்க முடியும்.

மேலும் - புர்யஷ்டகத்தின் ஈஸ்வரத் தன்மையோடு சேர்ந்து விளங்குபவர் வல்லபேசர் என்பதினாலே - ஜகத்ரூபமான புர்யஷ்டகம் - விக்னங்களாக விளங்கு வதை காணுவோம்.

புர்யஷ்டகம் என்பது - பஞ்சபூதம் - 5 ஸூர்யன் சந்திரன், யஜமானன் என்று கூறுகிறார் ஸத்குரு நாதர்.

இதுவே ஜகத்தாக தெரியாமல் ப்ரதிபந்தக ரூபமாக காரியப்பட்டால் அதுவே ஸத்பாவ ரூபமா கிறது. அதாவது சிதானந்தகனாத் மகமாய் அனந்த

மாய் நிறைந்து தன்மயம் அடையும்போது வல்லபேசர் ஆகிறது.

எனவேதான் இவர் விக்னராஜர் என்று கூறப்படுகிறார்.

"இத்துடன் முதல் அத்யாயம் நிறைவுறுகிறது.

இரண்டாம் அத்தியாயம்

2-1. பகிலிபதி :

காச்யபர் பேசுகிறார் :- எப்படி என்னுடைய சகோதரியின் பதியாக (ஸித்தலக்ஷ்மியின் பதியாக) வல்லபேசர் ஆனார் ?

மரீசியின் கூற்று :- ஸத்யம், ஞானம், ஆனந்தமான ப்ரஹ்மத்தை உபநிஷத்துக்கள் ஓம் தத் ஸத் என்று குறிப்பிடுகின்றன. இந்த ப்ரஹ்மத்தின் நான்காவது நிலை ஜகத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. ஓம் என்னும்படியான அக்ஷர பிரம்மம் ஐந்தாவதாக வருகிறது. தத் என்று குறிப்பிட்டுள்ள முதலாவதான ப்ரஹ்ம ரூபம் நிர்குணமானது. இதுதான் ச்ருஷ்டிக்கு முன்பு முதலானதாக இருந்த நிலை. இந்த நிர்குணப் ப்ரஹ்மம் ஞானமும் ஆனந்தமுமான ஸ்வரூபத்தை அடைந்தது. இரண்டாவதும் மூன்றாவதுமான நிலை. நான்காவதாக நாமரூப பிரபஞ்சத் தோற்றம். நான்காவதாக இதுவே ஜகத்துக்கு ஆதார பூதமானது. சிந்தாமணித்வீபம் எனப்படுகிறது. இந்த ஜகத்துக்கு ஆதாரபூதமாக விளங்குவது பிரம்மமாகிற வல்லபேசர் தான். அனைத்து புவனங்களும் ஈஸ்வரனுடைய மாயா சக்தியிலிருந்து தோன்றுவதுதான். அந்த மாயா சக்திதான் புவனத்திற்கு ஆதாரபூதம். இந்த ஜகத்திற்கு ஆதாரமான மாயாசக்திக்கு ஆதாரம் துரியமான ஈஸ்வரன்தான். எனவே ஜகத்துக்கும் அவரே ஆதாரம். இந்த ஜகத்தில் அக்ஷர பிரம்மமாக இருப்பதும்

அவர்தான். இந்த ஓம்காரமெனும் அக்ஷர பிரம்மம் தன்னைத்தானே பிரகாசிப்பித்துக் கொண்டு இந்த ஜகத்தில் விளங்குகிறது. இந்த ஸ்வஸம் வேத்யமான ஓம்காரமாகிற அக்ஷரபிரம்மம்தான் இந்த புவனங் களின் பதியாக விளங்குகிறது.

"ஏதத் த்யே வாக்ஷரம் ப்ரஹ்ம ...

கடோபநிஷத் 2 - 16

எது ஸத்யம், ஞானம், அனந்தம் என்பதாக விளங்குகின்ற ப்ரஹ்மமோ அதுவே இங்கு ஜகத்துக்கு ஆதார பூதமாகவும், ஓம்காரமெனும் அக்ஷர ப்ரஹ்ம மாகி சிந்தாமணித்வீபத்துக்கு பதியாக விளங்குகிறது என்று உபநிஷத் கூறுகிறது. ப்ரஹ்மம் தனது மாயாசக்தியால்தான் இப்பிரபஞ்சத் தோற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. மேலும் வேதங்கள் ப்ரபஞ்சத் தில் அதாவது இகத்தில் உள்ள ஸௌக்யங்களை, செல்வங்களை, பக (भग) சப்தத்தால் குறிப்பிடு கின்றது. இந்த ஜகத்தின் ஆதாரபூதமான மாயாசக்தி தான் அவ்வாறு குறிப்பிடப்படுகின்றதாக கொண்டோ மானால் ஈஸ்வரன் அதாவது வல்லபேசர் பகினீபதி யாக ஆகிறார். எனவே இங்கு பகினீ என்று ஸித்த லெக்ஷ்மி தான் குறிப்பிடப்படுகிறார்.

2. 2.

விஸுத்த ஸத்வ மாயையாக உள்ள ஈஸ்வரன் ஸமஷ்டி வ்யஷ்டி வ்யக்தியோடு அபேதத்தை அடை கிறார். பின்பு அவரே அதே நிலையில் துரீயபதமாக ஆகி சிந்தாமணி த்வீபத்துக்கு பதியாக ஆனார். இந்த ஈஸ்வரனுடைய மாயைதான் ஸித்தலெக்ஷ்மி. அதாவது இந்த மாயாசக்தியை உடைய விசுத்த ஸத்வ ப்ரதானமான அவளே, ஸித்தலக்ஷ்மியாக இருக்கிறாள். அவள் தவம்செய்ததினால் "வல்லபா" என்ற பெயரைப் பெற்று எனது புத்திரியாக ஆனாள். பின்பு சிந்தாமணி

த்வீபத்துக்கு அதிபதியாக (பரம்பொருள் வடிவினரான) வல்லபேசர் மூர்த்தி ரூபம் தரித்து என்னுடைய புத்திரி யான வல்லபையை விதிவத்தாக மணம் செய்து க்ரஹித்துக் கொண்டு வல்லபேசராக ஆனார்.

மேலும் இவ்விடத்தில் உபநிஷத் "ஓம் ப்ரஹ்ம" என்பது வல்லபேசர்தான் என்பதை மீண்டும் உறுதி செய்கிறது.

2. 3 : பக்த அனுக்ரஹம் :

காச்யபரின் கேள்வி : இந்த ப்ரஹ்மாண்டத்தில் வல்லபேசர் எந்தெந்த பக்தர்களை அனுக்ரஹித்தார் ?

மரீசியின் கூற்று : சதுர்வித புருஷார்த்தங்கள் என்பது தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பன. இவை வல்லபேசரின் "வ்யஷ்டிரூபம்." இந்த நான்கு புருஷார்த்தங்களும் ஒன்று சேர்ந்த நிலையில் அபேத நிலையில் - இருப்பது - அதாவது ஐந்தாவது நிலையில் - வல்லபேசரின் "ஸமஷ்டிரூபம்" என்பதாகும். இது ப்ரஹ்மபூயம் : இந்த ப்ரஹ்மபூய பதத்தை நாடினவர் வல்லபேசர். எனவே இந்த பதத்துக்கு நான்கு துவாரங் கள் :- அதாவது தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்றபடி.

த்வாரங்கள்	த்வார தேவதை	ரக்ஷிக்கும் தேவதை	ப்ரத்யதி தேவதை
1) தர்மம்	விஷ்ணு	லக்ஷ்மிநாராயணன்	யக்ஞர்
2) அர்த்தம்	ருத்ரன்	உமாமஹேச்வரன்	ஸ்கந்தர்
3) காமம்	சக்தி	ரதிமன்மதர்	புஷ்டீசர்
4) மோக்ஷம்	ஸூர்யன்	பூமிவாராஹர்	ப்ரஹ்மா

இவ்வாறு இவர்களுக்கு இந்த ப்ரஹ்மாண்டத்தில் தரிசனம் கொடுத்து ரக்ஷித்தார்.

2. 4 : பண்டாஸுரனை வதைக்கும் காலத்தில் லலிதா தேவியானவள் பண்டாஸுரன் ஏவின விக்யனந்த்

ரங்களை பேதனம் செய்யும் பொருட்டு கணபதியை ஸ்மரித்தாள்.

2. 5 :

ஒரு காலத்தில் பரமசிவனுடைய நெற்றிக் கண்ணுக்கு இரையாகி லக்ஷ்மிதேவியானவள் எரிந்து போனாள். அதனால் லக்ஷ்மியை இழந்து நின்ற விஷ்ணு திரும்பவும் லக்ஷ்மியை தான் அடைய வல்லபேசரைக் குறித்து தபஸ் செய்தார். தபஸுக்கு மகிழ்ந்த வல்லபேசர் வில்வ மரத்திலிருந்து லக்ஷ்மியை உண்டுபண்ணி விஷ்ணுவிடத்தினிலே தந்து அவரை அனுக்ரஹித்தார். மேலும் பார்வதியின் தபஸினால் மகிழ்ந்து பரமசிவத்துடன் அவளை சேர்த்து வைத்து வரங்களும் கொடுத்தார். இது போலவே ஈஸ்வரன் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக தபஸ் செய்தபோது அந்த தபஸினால் மகிழ்ந்து அவருடன் பார்வதியை சேர்த்து வைத்தார்.

2. 6 :

ஸரஸ்வதியை ப்ரஹ்மாவுடன் சேர்த்து வைத்ததும் மேலும் பரமசிவனின் நெற்றிக் கண்ணால் எரிக்கப் பட்ட மன்மதனை பிழைப்பித்து ரதியுடனே சேர்த்து வைத்ததும் இந்த வல்லபேசரே !

2. 7 :- பூமிதேவியை வராஹருக்கும் ப்ரபாதேவியை ஸூர்யனுக்கும் கொடுத்தவர் வல்லபேசரே ! புஷ்டிபதி தபஸினால் மகிழ்ந்து தரிசனம் கொடுத்து அவருக்கு ஸாருப்ய முக்தி அளித்தார். யக்ஞமூர்த்தி தபஸினால் மகிழ்ந்து தரிசனம் கொடுத்து யக்ஞதேவரை தனக்கு ப்ரியமானவராக ஆக்கிக்கொண்டார். ஸ்கந்தனின் தபஸால் மகிழ்ந்து தாரகன் முதலான அரக்கர்களை வதம் செய்யும் சக்தியை அவருக்கு கொடுத்ததோடு மட்டுமல்லாமல் வல்லிதேவியையும் அவருடன் சேர்த்து வைத்தார். இவ்வாறு அனேகவிதமான தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வல்லபேசர் அனுக்ரஹம் செய்தார்.

இவ்விதம் இரண்டாம் அத்யாயம் முடிகிறது.

மூன்றாவது அத்யாயம்

3.1 : கணபதி மூலமந்த்ர உத்தாரம் :

காச்யபர் சொல்கிறார் :- எனக்கு "ஆத்ம வித்யை"யை அனுக்ரஹம் செய்யுங்கள்.

மரீசியின் பதில் : [உபதேசிக்கிறார்.]

மந்த்ரத்தின் ரிஷி, சந்தஸ் தொடங்கி த்யானம் மூலமந்த்ரத்தின் இருவகையை சொல்கிறார்.

இந்த வித்யைக்கு ருஷி - கணகர்.

தேவதை	- வல்லபேசர்
சந்தஸ்	- நிச்ருத் காயத்ரீ
பீஜம்	- ஸர்வ காரணமான கம் (ஈ) என்ற வர்ணம்
சக்தி	- ஓம் எனும் ப்ரணவம்
கீலகம்	- ஸ்வாஹா என்பது.

காம், கீம், கூம், கைம், கௌம், க : என்ற தீர்க்க பீஜங்கள் ஆறையும் முதலிலே வைத்து ஷடங்கம்.

3. 2 : த்யானம்

வல்லபேசருடன் ஸ்வரூபத்யானம் ஆயுதங்களுடன் கூட இதில் காட்டப்படுகிறது. அவருக்கு 10 கைகளும் ஒரு தும்பிக்கையும் உண்டு.

கைகளில் பீஜாபூர பலம், கதை, கரும்புத்துண்டு, த்ரிசூலம், சக்ரம், சங்கு, பாசம், உத்பலபுஷ்பம், நெற் கதிர், தனது தந்தம் என்றும் தும்பிக்கையில் ரத்னகலசமும் கொண்டுள்ளார். தன் கையில் தாமரையைக் கொண்டுள்ள தன்னுடைய சக்தியான வல்லபையை அணைத்துக்கொண்ட நிலையில் விளங்குகிறார். மேலும் இவரேதான் இந்த ப்ரஹ்மாண்டங்களின் உத்பத்தி, பரிபாலனம், லயம் முதலியவற்றை செய்துகொண்டு

பக்தர்களுடைய விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்துகொண்டு விளங்குகிறார்.

3. 3. மூலமந்த்ரம் :

இது 28 அக்ஷரங்களுடைய வல்லபேசரின் மஹா மந்த்ரம்.

தார :	- ஓம்	- 1
ஸ்ரீ	- ஸ்ரீம்	- 1
சக்தி	- ஹ்ரீம்	- 1
கந்தர்ப்ப	- க்லீம்	- 1
(மௌரீ) மஹா	- க்ளௌம் (க்ரோட)	- 1
விக்னேச பீஜம்	- கம்	- 1
கணபதே	- கணபதே (விளித்தல்)	- 4
வரதத்விதயம்	- வரத வரத	- 6
ஸர்வஜனம்மே	- ஸர்வஜனம்மே	- 5
வசமானய	- வசமானய	- 5
ஸ்வாஹா	- ஸ்வாஹா	- 2
		28

வல்லபேசர் - ப்ரஹ்மபூய மூர்த்தியானதினாலே அவரை இந்த ஆத்ம வித்யையினாலே உபாஸனை செய்யும்போது அவர் ஸாதகனுக்கு கைவல்யப்ரதமான மோக்ஷத்தை அனுக்ரஹிக்கிறார்.

3. 4. :

மேற்படி மந்திரத்தில் "கணபதே வரதவரத" என்பதற்கு பதிலாக "கணபதயே வரவரத" என்று ஜபிப்பது ஒரு பாடம் இதுவும் 28 அக்ஷரங்கள் கொண்டதே! இது மிகவும் உத்தமானதாகும். மேலும் ஸர்வ காமப்ரதமான இது எல்லா கோரிக்கைகளும் நிறைவேறும்படி இதன் அமைப்பு சொல்லப்பட்டது.

3. 5. :

இவ்வாறு இரு பேதங்களையுடைய மந்த்ரம் சொல்லப்பட்டது. இதில் முதலிலே சொன்னது

ப்ரஹ்மபூயமான கைவல்யபதத்தையும் அடுத்தது ஸாதகர்களுடைய சக்திக்குத் தக்கபடி அனுஷ்டான பலத்தினால் கோறின காமங்களெல்லாம் நிறை வேறச் செய்யும் காம்ப்ரதத்தையும் கொடுக்கக்கூடியது.

3. 6 : பலவித - ப்ரயோக மந்த்ரங்கள் -
ஸ்ரீவித்யா கணபதி

காச்யபர் சொல்கிறார் :

அனேக விதமான காமப்ரத, யோக ஸித்தி அளிக்கக் கூடிய மந்த்ரங்களை அனுக்ரஹிக்க வேண்டும்.

மரீசி சொல்கிறார் : காமனை, யோகம் இவைகளை பூர்த்தி செய்யும்படியான ஸ்ரீவித்யா கணநாத மந்த்ரத்தை சொல்கிறேன்.

க. 5 : ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் ஹ 6 கணபதே வரத வரத ஸ 4 ஸர்வஜனம்மே வசமானய ஸ்வாஹா.

இந்த மஹா மந்த்ரம் 43 அக்ஷரங்களை உடையது.

இதன் யந்த்ர பூஜை விசேஷங்கள் ஸ்ரீ சக்ர உபாஸனா க்ரமத்திலேயே செய்யப்பட வேண்டியது.

3. 7 : ஸ்ரீ காயத்ரி கணபதி :

இந்த காயத்ரி கணபதி என்ற மந்த்ர ஸாதன மானது பர்கவித்யை எனப்படும். இது ப்ரஹ்ம நிர்வாணத்தை அடைவிக்கும். இஹபர ஸாதகமானது. ப்ரஹ்ம தேஜஸ்ஸைக் கொடுக்கும். ஆனந்தப்ரதமான இது அனிர்வசனீயமானது.

ஓம் தத்ஸவிதுர் வரேண்யம்
    ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம்
பர்கோதேவஸ்ய தீமஹி
    கணபதே வரத வரத
த் யோயோன : ப்ரசோதயாத்
    ஸர்வஜனம்மே வசமானய ஸ்வாஹா :

இது 53 அக்ஷரங்களுடையது.

3. 8. ஸ்ரீ பாலா கணபதி :

பாலாமந்த்ரத்தை கணபதி மந்த்ரத்துடன் சேர்த்து செய்யும்போது ஸ்ரீவித்யா என்ற நிலையில் காமப்ரத மானதாக இருக்கிறது.

ஐம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்ளௌம் கம் க்லீம் கணபதே வரதவரத ஸௌ : ஸர்வஜனம்மே வசமான யஸ்வாஹா !

இது 31 அக்ஷரங்களுடையது.

3. 9. ஸ்ரீ நீலகண்ட கணபதி :

நீலகண்டமந்த்ரம் 3 அக்ஷரங்களை சேர்க்கும் காலத்தில் இது விஷத்தை போக்கும் தன்மையுடையது. "வசமானய" என்னும் இடத்தில் "விஷம் நாசய" என்று உச்சரிக்க வேண்டும்.

ஓம் வ்ரீம் ட : ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம்
கணபதே வரதவரத ஸர்வஜனம்மே விஷம்.
நாசயஸ்வாஹா !

ஓம் ஜ்யோம்ஸ : ஸ : ஜ்யோம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதே வரதவரத ஜ்யோம் ஸ : ஸர்வரோகான் ஹர ஹர ஸ : ஜ்யோம் ஸ்வாஹா ! இது ஸர்வ ரோகங்களையும் நாசம் செய்யும் கணபதி மந்த்ரமாகும்.

3. 10. ஸ்ரீ அகோர கணபதி :

சத்ரு உபாதையை நீக்கி, துஷ்டப்ரயோகமான ஆபிசாரம் முதலான க்ருத்யங்களை நாசம் செய்து ஸர்வ அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடிய ஸ்ரீஅகோர கணபதி மந்த்ரம்.

ஓம் கம் க : ஹ்ரீம் ஸ்புரஸ்புர ப்ரஸ்புர ப்ரஸ்புர கோர கோரதர தனுரூப சட சட ப்ரசட கஹ கஹ வம வம.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதே வரத வரத (ஸாத்யம்) பந்த பந்த காதய காதய ஹூம் பட் ஸ்வாஹா !

3. 11. ஸர்வ வித்யா கணபதி :

ஐம் ப்ளூம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதே வரத வரத ஐம் ப்ளூம் ஸர்வ வித்யாம் தேஹி ஸ்வாஹா ! இது ஸர்வ வித்யா ப்ரதாயக மானது.

3. 12.

இவ்வாறு வச்யம், ஆகர்ஷணம் முதலான ஆறு க்ர்மாக்களிலும் அந்த அந்த பீஜங்களை சேர்த்து செய்யும்போது அந்த அந்த ஸித்தியைக் கொடுக்கும்படி வல்லபேசர் அனுக்ரஹிக்கிறார். (மந்த்ர சாஸ்த்ரங்களில் அனேகவிதமான ப்ரயோகங்கள் உள்ளன.)

3. 13. ஸ்ரீ ஸம்பத் வ்ருத்திகர கணபதி :

(ஸ்ரீ / த ரா / சக்தி).

ஸ்ரீம் க்லௌம் ஹ்ரீம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் ஸ்ரீம் க்லௌம் ஹ்ரீம் கணபதே வரத வரத ஸ்ரீம் க்லௌம் ஹ்ரீம் ஸர்வ ஸம்பதம் தேஹி தேஹி ஸ்வாஹா !

இது ஸம்பத் வ்ருத்தியை க்ரமமாகக் கொடுக்கும்.

இந்த மந்த்ரபேதங்கள் அனைத்தும் வல்லபேசருடைய ப்ரஸாதத்தினால் அடைய தக்கது.

நான்காம் அத்தியாயம்

கணபதி ஆராதனவிதி

4. 1.

காச்யபர் கேட்கிறார் :- வல்லபேசருடைய ஆராதனா விதிகளை எனக்குச் சொல்லுங்கள். அதற்கு மரீசி பதில் சொல்கிறார்.

4. 2. ஜபம்

சைவ, வைஷ்ணவ, ஸௌர, சாக்த, காணாபத்யம் என்று உபாஸிக்கப்படுகிற தேவதைகளே-வல்லபேசர் தான்.

கணபதியின் சின்னங்களான, அவருக்கு ப்ரியமான ஸிந்தூரம், ரக்தசந்தனம், மேலும் சோழிகளின் மேல் கணபதி சின்னம் பதித்த கணேசாக்ஷம் இவற்றை ஜபம் செய்யும்போதும் பூஜை செய்யும்போதும் தரித்துக் கொள்வது விசேஷமாகும்.

உஷத்காலம் என்கிற விடியற்காலை கணேசருக்கு மிகவும் ப்ரியகரமான வேளையாகும். அப்போது ஜபம் செய்யவேண்டும் என்பது ஸத்குருஸம்ப்ரதாயம். மத்தியானம், அர்த்தராத்ரி இந்த வேளைகள் இல்லாமல் இதர காலங்கள் ஜபம் செய்யவேண்டும்.

யஜனம் - பூஜை

4. 3.

யஜனம் என்பது 5 பாகமாகவும் மந்த்ர உபாஸனம் என்பது 5 பாகமாகவும் சாஸ்த்ரம் சொல்கிறது.

கவசம், ஹ்ருதயம், சதுராவ்ருத்தி தர்ப்பணம், ஸ்துதி, ஸஹஸ்ரநாமம் என்ற 5யும் தேவதா பஞ்சாங்கம் என்றும், கணபதி மூலமந்த்ர ஜபம் (4 லட்சம்)

இதில் தசாம்சம் ஹோமம் இதில் தசாம்சம் மூலமந்த்ர தர்ப்பணம் இதில் தசாம்சம் மார்ஜனம் இதில் தசாம்சம் ஸமாராதனம் என்ற 5ம் மந்த்ர பஞ்சாங்கம் என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

(444 ×	1000	ஆவ்ருத்தி -	ஜபம்
444 ×	100	,,	ஹோமம்.
444 ×	10	,,	தர்ப்பணம்.
444		,,	மார்ஜனம்
444		,,	ஸமாராதனம்

என்ற ஒரு க்ரமமும் தந்த்ரங்களில் காணப்படுகிறது.)

இவ்வாறு தசாங்கஸஹிதமாக மந்த்ரானுஷ்டானம் செய்வதினாலே வல்லபேசர் சந்தோஷித்து ஸாதகனுடைய அபீஷ்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிறார்.

4. 4. ஹோமம் :

கணேசாக்னியில் (அதாவது வைதீக விதிப்படியோ, தாந்த்ரீக விதிப்படியோ உள்ள அக்னியில்) 1000 ஆவ்ருத்தியாக வைதீகமந்த்ரமான "கணானாம்த்வா" மந்த்ரத்தாலோ அல்லது தாந்த்ரீக மந்த்ரத்தாலோ அல்லது இரண்டினாலுமோ அல்லது கேவல தாந்த்ரீகத்தாலோ விஹித காலங்களில் ஹோமம் செய்யவேண்டியது.

வெள்ளை எருக்கு வேரினால், யந்த்ரம் விக்ரஹம் செய்தோ அல்லது சோணபத்ரம் என்ற சிலையிலோ பூஜை செய்வது விசேஷம்.

அபிஷேகத்துக்கு சோணசிலை உயர்ந்தது. லோக வச்யாதி ஸித்திகளை யந்த்ரபூஜை கொடுக்கும். மேலும் தேவதா அனுக்ரஹத்துக்கு பிம்பம் விசேஷம்.

கணபதியின் நித்யபூஜை ஷோடச உபசாரத்துடன் செய்யவேண்டும். இதற்கு புருஷஸூக்தம், ப்ரஹ்மணஸ்பதி ஸூக்தம் (21 ருக்) ருக்வேதீயபுருஷ ஸூக்தம் (16 ருக் இவைகளுடன் கணானாம் த்வா - மந்த்ரம் உபயோகம்.

4. 5. யந்த்ரம் போடும் விதம். இதில் உத்தாரம் செய்யப்பட்டிருக்கிறது.

1. பிந்துவில் ஓம்

த்ரிகோணம்	:	ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்.
ஷட்கோணம்	:	ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம்.
ஸந்திஷு	:	காம் கீம் கூம் கைம் கௌம் க :
அஷ்டதளம்	:	கணப / தயேவ / ரவர / தஸர்வ / ஜனம். மே / வசமானய ஸ்வாஹா.
அஷ்டதளம் அக்ரே (ஸந்தி)	:	தத்புரு / ஷாயவி / த்மஹேவ / க்ர துண்டார / யதீம / ஹிதன்னோ / தந்திப் ரசோதயாத்.
ஷோடசதளம்	:	கணநாம் த்வாகணபதிம்ஹ வாமஹே கவிம்க வீனாமுபவச்ர வஸ்தமம் ஜ்யேஷ்ட ராஜம்ப்ரஹ் மணும்ப்ரஹ்மணஸ்பபத ஆனச் ருண்வன்னூதி பிஸ்ஸீதஸானம்.
வ்ருத்தம்.	:	மாத்ருகாபீஜம் ஆம் ஹ்ரீம் க்ரோம்.
பூபுரம்	:	திக்பாலம் - (இந்திராதி)

4. 6. ஆவரண தேவதா :

முதல் த்ரிகோணம் - ரமா--ரமேச, உமா---மஹேச்வரர், ரதி கந்தர்ப்ப, மஹி வராஹர்

இரண்டாம் ஷட்கோணம் : ஆமோதம், ப்ரமோதம், ஸுமுகம், துர்முகம், அவிக்னம், விக்னகர்த்தாரம்.

3. (அங்கதேவதா) ஹ்ருதயம், சிரஸ்சிகா, கவசம், நேத்ரம், அஸ்த்ரம்.

4. (மாதரம்). ப்ராஹ்மி, மாஹேச்வரி, கௌமாரி, வைஷ்ணவீ, வாராஹி, மாஹேந்த்ரி, சாமுண்டா, மஹாலக்ஷ்மி.
5. (திக்பாலம்). இந்திரன் முதல் எட்டு

பிறகு, தீவ்ரா, ஜ்வாலினி முதல் பீடசக்தி பூஜை த்வாரதேவதைகள் பூஜை.

பிறகு, ஆவாஹனம் ஆஸனம் ஷோடசோப சாரபூஜை செய்வது.

இது நித்ய பூஜையாகும்.

4. 7. பலச்ருதி :

கணேசரை அர்ச்சனம் முதலான பூஜைகளால் நித்யம் அனன்யசரணு கதியோடு பூஜை செய்பவர் களுக்கு ஸர்வ விக்னங்களும் நிவர்த்தியாகிவிடும். ஸர்வஸித்திகளும் கைகூடும். சதுர்விதமான புருஷார்த் தங்களையும் அடைந்து ப்ரஹ்மபூயமான, கைவல்ய நிலையை அடையலாம். யார் பக்திச்ரத்தையோடு இந்த உபநிஷதத்தை நித்யபாராயணம் செய்கிறார் களோ அவர்களுக்கு விக்னங்கள் யாவும் நிவர்த்தியாகி எல்லா விதமான பலன்களையும் அனுபவிப்பார்கள். கடைசியில் ப்ரஹ்மானந்த ப்ராப்தியை அடைவர் என்பது உறுதி.

இப்படி இந்த வல்லபேசோபநிஷத் முடிவு பெறுகிறது.

''சுபம்''

பிழைத் திருத்தம்

வ.எ.	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	x	20	ப்ரத்யேகமாக	ப்ரத்யேகமாக வெவ்வே
2	ix	17	திருத்துவர்களாக	திருத்துவார்களாக
3	x	34	ஞானானந்த	ஞானானந்த
4	"	35	ப்ரஹ்மஸ்ரீ	ப்ரஹ்மஸ்ரீ-ந
5	xviii	9	வைக்கிறது	வைக்கிறது
6	6	16	மஹாகணபதி	ஸ்ரீ மஹாகணபதி
7	7	1	"	"
8	9	1	"	"
	~~13 பக்கம்~~		~~யந்த்ரம்~~	~~யந்த்ரம்~~
9	25	17	கோரச	கோரல்
10	26	21	பலசெய்த	பல உபசாரம் செய்
11	39 (x) (1, 2, 3)	8	ஹரம	ஹரம்
12	55	6	தபோவாச	தப்போவாச
13	58	9	[7]	திக்ஷயம்
14	58 (x) (4)	10	பிதயவிட்டமை	பிதயவிட்டமை [7]
15	59	14	பத்திரிகை	பத்திரிகை
16	60	10	காவுபசிரேஷ்ட	காவுபசிரேஷ்டனை
17	61	15	உள்ளத்துறுள்	உள்ளது உள்ள

	64.	20 ✓	துபேர்	துபேர்
19	65	3 ✓	புத்புகழ்நினைவ	புத்புகழ்நினைவ
20	69	10 ✓	ஏப்பு கேள்வி	கேள்வெப்பு
21	69	24 ✓	தெப்புநாலே	எம்புநாலே
22	72	12 ✓	வேந்துயர்	வேந்துயர்
23	72	13 ✓	பாம்பாமொழு	பாம்பாமொழு
24	73	7 ✓	வத்யா[illegible]	வத்பாவ[illegible]
~~23~~				
25	52	4 ✓	ப்ரவச்ச	ப்ரவச்ச (x) 1
26	53	25 ✓	பப்ரவச்ட	பப்ரச்ச 2
27	54	18 ✓	பண்டார்வர	பண்டாவர 3
28	58	12 ✓	காம தர்மாந்த ~~[illegible]~~	தர்மாந்த ~~[illegible]~~ (x) 4
29	XXI	3 ✓	கேபாலத்தில்	கேப. பலத்தில்
30	XVIII	10 ✓	தேவைகளையும்	தேவதைகளையும்
31	XVIII	17 ✓	அநுபவங்களில்	அநுபவங்களில்
~~[illegible]~~				
32	9	15 ✓	த்ராவணம்	த்ராவிணம்
33	4	5 ✓	~~[illegible]~~ ப்ராத்தன்	~~[illegible]~~ ப்ராத்தன்
34.	XI	10 ✓	திறுப்பணம்	திறுப்பணம்
35	86	9 ✓	தஸ்ரவ	தஸ்ரவ
36	XXIV	23 ✓	[illegible]	ஜெப்வதை
37	II	5 ✓	பார்வாதத்	பர்வதாத்

38 22 24 தேவாரம் , [illegible]

39 27 [illegible] — [illegible]

40 28. [illegible] 11 [illegible] [illegible] 27 [illegible]

41. 54 [illegible] [illegible]

42 21/10 [illegible] [illegible] [illegible] [illegible]

43 11 7 [illegible] [illegible]

44 64/ [illegible]/ அபேதமே. [illegible]

16

7 [illegible]